# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆடி –26 11–08–2003 திங்கட்கிழமை ஓசை 174



தொழில் நுட்பத்தில் நுணுக்க நேர்த்தியுடன் கூடிய பொறுப்புக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
அனைத்திற்கும்

Jaffna Road,
Kilinochchi.

யாழ் சாலை,
(கி-3437) கிளிநொச்சி.


## இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள் வாழ்ந்துகொண்டு

# தலைவரின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் மக்களைப் பார்க்கையில் மனநிறைவு ஏற்படுகிறது

## யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் மாநாட்டில் சு.ப.தமிழ்ச்செல்வன்

**இராணுவத்தின் இரும்புப் பிடிக்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் வாழ்ந்து கொண்டு தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைக்கு, அவரது எதிர்பார்ப்புக்கு செயல்வடிவம் கொடுப்பதற்காகத் துணிந்து முன்வந்து எமது மக்கள் தேசிய எழுச்சிப் பேரவையோடு இணைந்து நிற்கின்றதைப் பார்க்கின்ற போது எமக்குப் பெரும் மகிழ்வும் நிறைவுமாக இருக்கின்றது என நேற்று பளை மத்திய கல்லூரியில் நடைபெற்ற யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழீழ தேசிய விடுதலைக்காக தமிழீழ தேசியத் தலைவரின் வழிகாட்டுதலுக்கமைவாகவும் எதிர்பார்ப்புக்கமைவாகவும் ஒரு வெகுசன அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டும் என்கின்ற அவரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையிலும் நாம் பல்வேறு மட்டத்தில் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்த போது எமக்கு பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் இருந்தன. அதாவது இராணுவத்தின் பிடிக்குள் இருக்கின்ற பிரதேசங்களில் இது சாத்தியப்படுமா? அங்கே எதிரியினுடைய அச்சுறுத்தல்களும், ஆக்கிரமிப்புக்களும், நெருக்கடிகளும் சூழ்ந்திருக்கின்ற காரணத்தால் இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும்? என்ற சந்தேகம் எங்கள் மனதிலே இருந்தது.

நாங்கள் எங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இதை வெற்றிகரமாக அமைத்து சிறப்பாக செயற்பட வைத்த அதேவேளை,எங்களது சந்தேகங்களையெல்லாம் உடைத்தெறிந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கின்ற எமது தமிழீழ உறவுகள் எமது தலைவரின் வழியிலே அணிதிரண்டு ஒன்றுபட்டு

(08 ஆம் பக்கம் பார்க்க)






பளையில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவை மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்களில் ஒரு பகுதியினர்.

## மூவாயிரத்திற்கு மேற்பட்டோர் பங்கேற்ற யாழ். தே.எ. பேரவை பேராளர் மாநாடு

யாழ் மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு நேற்று முற்பகல் 10.45 மணிக்குப் பளை மத்திய கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரை லெப்டினன்ட் அறிவழகனின் தாயார் தட்சாயினி அவர்களும் மேஜர் பகலவனின் தந்தையார் நாகராசா அவர்களும் தமிழீழ மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கலைவிழியும் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை வடமுனைக் கட்டளைத் தளபதி தீபன் அவர்கள் ஏற்றிவைத்தார். யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ஜெயமன் சூசில் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வாழ்த்துரைகளைச் சர்வதேச இந்து மதக் குருமார் ஒன்றியத் தலைவர் மனோ சரன் குருக்களும் யாழ்மறை மாவட்டக் குரு முதல்வர் டேவிட் அடிகளாரும் வழங்கினர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் அமரதுங்கவின் வருகைக்கு எதிராக மக்கள் கச்சேரி முன் மறியல்

### அரச செயலகத்திற்கு அமைச்சர் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவின் உள்நாட்டுப் பாதுகாப்பு கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் யாழ் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று யாழ்.அரச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் சங்கமும் வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த (உயர்தர) பரீட்சை

## பாடசாலைப் பெறுபேறுகளை வலயக் கல்விப் பணிமனைகளில் பெறலாம்

2003 ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வந்து சேர்ந்துள்ளன. அதிபர்கள் தமது பாடசாலைப் பெறுபேறுகளைக் கிளிநொச்சி, முல்லைத் தீவு, துணுக்காய் வலயப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம் எனக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## இழுத்தடிப்பு

கடந்த மாதம் காக்கைதீவுப் பகுதியில் தொழிலுக்குச் செல்லப் புறப்பட்ட மீனவர்மீது கடற்படைச் சிப்பாய் ஒருவர் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பான விசாரணைக்கு சமுகமளிப்பதற்குப் படைத்தரப்பு இழுத்தடித்து வருகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டு இதற்கமைய கடந்த 29ஆம் திகதி விசாரணைக்கு கடற்படைச்சிப்பாய்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபரை மோதிவிட்டு ஓடியவாகனத்தைக் காவல்துறையினர் விரட்டிப் பிடித்தனர்

(அலுவலகச்செய்தியாளர்)

வயோதிபர் ஒருவரை முட்டி மோதிவிட்டு நிறுத்தாது விரைந்து சென்ற ஹைஏஸ் வாகனம் ஒன்றினை தமிழீழக் காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் விரட்டிச் சென்று மடக்கிப் பிடித்துக் காவல்பணிமனைக்கு கொண்டு வந்தனர். மேற்படி சம்பவம் நேற்று பகல் 12 மணியளவில் இடம்பெற்றது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் கிண்ணி நினைவு மண்டபம் நாகர்கோவில் களமுனையில் திறப்பு

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் முதலாவது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட முதல் சிறப்புத் தளபதி மேஜர் கிண்ணியின் 11ஆம் ஆண்டு நினைவாக அமைக்கப்பட்ட மண்டபத் திறப்பு விழா நிகழ்வு நாகர்கோவில் களமுனையில் போராளிகளால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. போராளி காண்டீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முன்னாள் சிறப்புத்தளபதியும், வடபோர்முனை கட்டளைத் தளபதியுமான கேணல் தீபன் ஏற்றிவைத்தார். படையணிக் கொடியை படையினரின் தளபதி லெப்.கேணல் கோபித் ஏற்றிவைத்தார். மேஜர் கிண்ணியின் பெயர்ப்பலகையினை வடபோர்முனைக் கட்டளைத்தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் அறிவு திறந்துவைத்தார். மேஜர் கிண்ணியின் நினைவாக அமைக்கப்பட்ட மண்டபத்தை சாள்ஸ்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகத்துக்கு எதிரான ஜே.வி.பியின் போராட்டம் ஆரம்பம்

இடைக்கால நிர்வாகத் திட்டத்திற்கெதிரான பத்து நாள் வேலைத்திட்டம் ஒன்றை ஜே.வி.பி. நேற்று ஆரம்பித்துள்ளது திருகோணமலையிலும் இடைக் கால நிர்வாகத் திட்டத்திற் கெதிராகப் பிரச்சாரங்களை ஆரம்பித்துள்ளனர். துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதுடன் வரும் புதன்கிழமைவரை திருகோணமலையில் இந்த எதிர்ப்புச் செயற்பாடு தொடரப்படவுள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. கொழும்பில் நாளை பல ஆயிரம் பேரைத் திரட்டி அரசாங்கத்திற்கெதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் ஜே.வி.பி. அறிவித்துள்ளது.வடக்குக் கிழக்கை விடுதலைப்புலிகளுக்குப் பிரித்து வழங்கித் தமிழீழத்தைப் பெற்றுக்கொடுக்க

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### பெயர் மாற்றம்

முன்பு இரணைப்பாலையில் இயங்கிவந்த ராஜா போட்டோ தற்பொழுது பெயர் மாற்றத்துடன் அழகரசன் வெளிக்களப் படப் பிடிப்பாளர், எட்வின் வீதி, 7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு எனும் முகவரியில் இயங்குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன். உரிமையாளர், கைடி பொன்கலன் (ராஜா) (3475)

### N.E.C

நீதிமன்று முன்பாக கிளிநொச்சி A/L Day class. சகல பாடமும் 13.08.2003 இம்முறை முதன்மை பெறுபேறுகளுக்கு வழிசமைத்த ஆசிரியர் குழாம் ஒன்றிணைந்த சேவையில் ஆரம்பம். அனுமதியை முன்பெறவும். நிர்வாகம். (3622)


# கிளி. வைத்தியசாலைகளில் பணிபுரியும் தொண்டர்களை நிரந்தரமாக்கக் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளில் பணிபுரியும் தொண்டர்கள் நிரந்தர நியமனமற்ற நிலையில் நீண்டகாலமாக பணியாற்றி வருகின்றனர்.

இவர்களை நிரந்தர ஊழியர்கள் ஆக்குவதற்கு ஏற்ற நடவடிக்கையினை மேற்கொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப்பணிப்பாளரிடம் கிளி.மாவட்ட கியூடெக் நிறுவன இணைப்பாளர் கணேசபிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி வேண்டுகை குறித்து கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்,

வைத்தியசாலையில் தொண்டர்களாகப் பணிபுரிவோரின் கல்வித் தகமை அடிப்படையில் பிரச்சினைகள் தோன்றியுள்ளதன் விளைவாக அவர்கள் நிரந்தர நியமனம் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும்.

எனினும் அவர்களிடம் உள்ள தகைமைகளின் அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுக்க மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேற்படி பணியாற்றும் தொண்டர்களுக்கு 1994ம் ஆண்டு முதல் கியூடெக் நிறுவனமே கொடுப்பனவுகளை வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (சோ)

## முன்பள்ளி விளையாட்டு

(ஒட்டுசுட்டான்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வு கழகத்தால் நடாத்தும் முன்பள்ளி பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டு கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

கற்சிலை மடு அ.த.க.பாடசாலையில் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கற்சிலைமடு அ.த.க பாடசாலையின் அதிபர் போ.அருமைச்சந்திரன் அவர்கள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து விளையாட்டு விழா நடைபெற்று இறுதியில் பரிசில்களும் வழங்கப்பட்டு மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (05)

- சுதந்திரபுரம் படுகொலை நினைவாக -

## நினைவுத் தூபி அமைக்க உடையார் கட்டில் கலந்துரையாடல்

(உடையார்கட்டு)

உடையார்கட்டு சுதந்திரபுரம் படுகொலைகள் நினைவக நினைவுத் தூபி அமைக்கும் விடயமாக உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் நாளை காலை 10 மணிக்குப் புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல் துறையினரும், புதுக்குடியிருப்புப் பிரதேசச் செயலரும் இணைந்து ஒன்று கூடல் நிகழ்வினை நடாத்தவுள்ளனர். இதற்கு உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு வடக்கு, சுதந்திரபுரம் பகுதிகளைச் சேர்ந்த கமக்காரர் அமைப்பு, மாதர்சங்கம்,கிராம அபிவிருத்திச் சங்கம், ஆலய நிர்வாகத்தினர், தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவையினர் போன்ற பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் ஒன்று கூடலிற்கு வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர். (19)

# அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து ஒட்டுசுட்டானில் கலந்துரையாடல்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மக்களிடையே அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற, நடைமுறைப்படுத்தப்படாத வேலைத்திட்டங்கள் ஆராயப்பட்டதுடன் மக்களின் பிரதிநிதிகளால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டது.

கருத்துரைகளை முல்லை மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர், ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர், முல்லை மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர், முல்லை மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஆகியோர் வழங்கினர்.

முல்லை மாவட்ட அரச அதிபர் இமல்டா சுகுமார் கருத்துத்தெரிவிக்கையில், கிராம அமைப்புகள் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக்கள் வழங்க வேண்டும் என்றும் தற்போது உள்ள வைத்தியசாலைகள் தரம் உயர்த்தப்படும் என்றும் கூறினார்.

முல்லைமாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு கருத்து தெரிவிக்கையில், கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் மக்கள் மத்தியில் அபிவிருத்திச் செயற்பாட்டை விளக்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கிராம சேவகர்களும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களும், முல்லைமாவட்ட சகல திணைக்களங்களின் அதிகாரிகளும் கமக்கார அமைப்பினர், கிராம அபிவிருத்திச் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர். (05)

## கரைச்சிப் பிரதேசத்தில் தொடர்ந்து காணி உரிமம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச காணிக் கிளை அலுவலகத்தினால் மேலும் உரிமப்பத்திரம் வழங்கப்படாத காணி உரிமையாளர்களுக்கான காணி உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கரைச்சிப் பிரதேச காணி அலுவலர் செ.சிறிரங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் நாளை காலை 9.00 மணி முதல் கரைச்சிப் பிரதேச செயலக ஸ்கந்தபுரம் உப பணிமனையில்வைத்து, அக்கராயன்,கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம் கிராமகாணி உரிமையாளர்களுக்கும் எதிர்வரும் 15 ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு சிவநகர் கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் வைத்து உருத்திரபுரம்,வடக்கு-உரு/கிழக்கு, உரு/மேற்கு மற்றும் சிவநகர் கிராம காணி உரிமம் பெறாதுள்ளவர்களுக்கும், 18 ஆம் திகதியன்று திருவையாறு கிராம முன்னேற்றச் சங்கத்தில் வைத்துத் திருவையாறு கிராம காணி உரிமம் பெறவுள்ளவர்களுக்குக் காணி உரிமங்கள் வழங்கப்படவுள்ளதெனவும் காணி உரிமத்தைப் பெற வருகை தரும் உரிமையாளர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டையினைத் தவறாது எடுத்து வரும் வண்ணம் வேண்டியுள்ளனர். (சோ)

## உந்துருளி-துவிச்சக்கரவண்டி விபத்தில் உந்துருளியில் வந்தோர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஏ-9 நெடுஞ்சாலையில் இடம்பெற்ற உந்துருளி - துவிச்சக்கர வண்டி விபத்தில் உந்துருளி ஓட்டியும் உந்துருளியின் பின்னால் இருந்து பயணித்தவரும் காயத்துக்குள்ளாகினர்.

துவிச்சக்கர வண்டியும் உந்துருளியும் இச்சம்பவத்தில் சேதமாகியுள்ளன.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பி.ப.5.10 மணியளவில் கிளி. மத்தியகல்லூரிக்கு அண்மையாக இடம்பெற்றுள்ளது.

உந்துருளி ஓட்டியான கனகாம்பிகைக்குளத்தைச் சேர்ந்த செ.செல்வக்குமார் உந்துருளியில் பயணித்த செ.ராஜினி ஆகியோர் இச்சம்வம் காரணமாகக் காயங்களுக்குள்ளான நிலையில் கிளி. மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொண்டுள்ளனர்.

தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

## ஜா-எல கிழக்கு சரணாலயம் பொது மக்களுக்குத் திறப்பு

(மட்டக்களப்பு)

1985 ஆம் ஆண்டு முதல் எதுவித பராமரிப்பும் இன்றி மூடப்பட்டுக் கிடந்த ஜா-எல கிழக்குத் தேசிய பூங்காவும் சரணாலயமும் பொது மக்கள் பார்வைக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

சுமார் 18 வருடங்களுக்குப் பின் இந்தப் பிரதேசங்கள் மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இப்பகுதிக்கு விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினரான அரியநாயகம் சந்திரநேரு நிலைமைகளை அவதானித்ததுடன் கிழக்கிலுள்ள ஒரேயொரு சரணாலயத்தைப் பாதுகாப்பது எமது கடமை எனத் தெரிவித்துள்ளார்.

## மஸ்கெலியா தோட்டப்பகுதியில் ஒருவகை வைரஸ்காய்ச்சல்

(கொழும்பு)

மஸ்கெலியா பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் ஒருவகை வைரஸ் காய்ச்சலுக்கு பல தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சரையும் மத்திய சுகாதார அமைச்சரையும் மலையகமக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரன் கேட்டுள்ளார்.

இதுகுறித்து சுகாதார அமைச்சருக்கும் சம்பந்தபட்ட அதிகாரிகளுக்கும் அமைச்சர் சந்திரசேகரன் அவசர தந்திகளை அனுப்பிவைத்துள்ளார்.

## மடுமாதா திருச்சுரூப பவனி மருதானையிலிருந்து ஆரம்பம்

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசரினால் ஆசீர்வதிக்கப்பட்ட மடுமாதா திருச்சுரூப பவனி நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

மருதானை பாத்திமா தேவாலயத்தில் இருந்து ஆரம்பமாகியுள்ள இத் திருச்சுரூப பவனி தென்பகுதியின் பல பாகங்களுக்கும் செல்லும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பூனகரிப் பிரதேசத்தில் கால்நடை வைத்தியசேவை

(அலுவலக செய்தியாளர்)

பூநகரிப் பிரதேசத்தில் தற்போது விசேட கால்நடை வைத்திய சேவை நடைபெற்று வருகின்றது.

பூநகரி கால்நடை வைத்தியர் பிரிவினரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து கடந்த 23 முதல் இச் சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி பகுதிகளிலுள்ள 1485 மாடுகளுக்குத் தொண்டைப்பைப்பான் தடுப்பு மருந்து வழங்கப்பட்டும், 1400 கோழிகளுக்கு மற்றும் 112 நாய்களுக்குத் தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கோழிக்குஞ்சு விநியோகம், கருப்பரிசோதனை, செயற்கைமுறைச் சினைப்படுத்தல், பண்ணையாளர்களுக்கான கலந்துரையாடல்கள் என்பன இடம்பெற்று வருகின்றன. பூநகரிப் பிரதேசத்தில் மேற்படி சேவை சாமிப்புலம்,நல்லூர், ஆலங்கேணி,முட்கொம்பன், தியாகம், ஞானிமடம், கறுக்காய்த்தீவு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சோ)

## சிப்பாய் தற்கொலை

கண்டிப் பெரஹரவில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இவரது தற்கொலைக்கான காரணம் தெரியவரவில்லை.

**********

## பயணிகள் அவலம்

கொழும்புக்கோட்டை பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா ஊடாக மன்னார் செல்வதாகக் கூறி பயணிகள் ஏற்றிய தனியார் பேருந்து அடுத்தநாள் காலை 8.30 மணியளவில் அனுராதபுரத்தில் வவுனியாப் பயணிகளை இறக்கி விட்டு மன்னாருக்குச் சென்று விட்டது. இதனால் இதில் பயணித்த பலர் அவலநிலைக்கு உள்ளாகினர். இச்சம்பவம் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்றது. (34)

## கடமைகளைப் புறக்கணித்த 21 பொலிசார் இடைநிறுத்தம்

வெளியிடங்களில் இருந்து கண்டி எசல பெரஹெரா பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்ட பொலிசாரில் 21 பேர் கடமைகளைத் துஷ்பிரயோகம் செய்ததால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இக்கடமைக்காக 7000 பொலிசார் அழைக்கப்பட்டு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 21 பேர் கடமையைத் துஷ்பிரயோகம் செய்தமையால் இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நீர்வீழ்ச்சியில் குளிக்கச் சென்றவர் நீரினால் அடித்துச்செல்லப்பட்டார்

லக்சபான நீர்வீழ்ச்சியில் குளிக்கச்சென்ற இளைஞர் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

கண்டியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் ஒருவரே நேற்று முன்தினம் மாலை நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## குளிரூட்டும் வசதி இன்மையால் சிறந்த சேவை வழங்க முடியவில்லை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் அரச கால்நடை உற்பத்தி சுகாதார வைத்திய பணிமனையில் குளிர்சாதன வசதிகள் எதுவும் இன்மையால் சிறந்த முறையில் சேவையினை வழங்க முடியாத நிலை உள்ளதாக ஒட்டுசுட்டான் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் திணைக்களங்களிற்கும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களிற்கும் இதுபற்றி எடுத்துக் கூறியுள்ளதாகவும் தெரிவித்தார். (05)

# கேந்திர நிலைகளை கைவிட கிளர்ச்சியாளர் மறுப்பு சமாதான படையினரின் செயற்பாடுகள் முடக்கம்!

## - லைபீரியாவில் மீண்டும் நெருக்கடி

**லைபீரியாவில் அமைதி ஏற்படுவதில் தொடர்ந்து இழுபறி நிலை காணப்படுகிறது. இதனால் மீண்டும் மோதல்கள் வெடிக்குமோ என்ற அச்சமும் தலைதூக்கியுள்ளது. ஐ.நா. அனுசரணையுடனான சமாதானப் படையினரின் செயற்பாடுகளுக்கு விடுக்கப்பட்ட முட்டுக் கட்டைகளையடுத்தே இந்த நிலை தோன்றியுள்ளது.**

லைபீரியாவில் அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான மோதல்கள் முடிவுக்கு வந்துள்ள நிலையில் சனாதிபதி சார்ளஸ் ரெயிலர் தனது பதவியைத் துறந்து நாட்டை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளமை தெரிந்ததே.

இவர் இன்று முறைப்படி பதவி விலகுவது குறித்து அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிலையில் ஐ. நா. அனுசரணையுடனான மேற்காபிரிக்க சமாதானப் படையினரில் ஒரு பகுதியினர் லைபீரிய தலை நகருக்குள் சென்றுள்ள நிலையில் அவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு கிளர்ச்சியாளர்கள் தடையாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தலைநகர் மொன்ரோவியா வரை முன்னேறியிருந்த கிளர்ச்சிப் படைகள் பல கேந்திர முக்கியத்துவம் மிக்க பகுதிகளை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருந்தது. இவ்வாறு தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் சமாதானப் படையினரை அனுமதிக்க கிளர்ச்சியாளர்கள் மறுத்து வருகின்றனர்.

நைஜீரிய சமாதானப் படையினரை லைபீரியாவில் பணியாற்றுவதற்கு அனுமதிப்பது பற்றி தங்கள் தலைமைப்பீடமே தீர்மானிக்க வேண்டும் என கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் தலைநகர் மொன்ரோவியாவிலுள்ள முக்கிய துறைமுகம் ஒன்றின் முற்றுகையை கைவிட்டு அகதிகளுக்கும் தலைநகர வாசிகளுக்கும் உணவு பொருட்களையும், ஏனைய உதவிப்பொருட்களையும் கொண்டு செல்ல அனுமதிக்குமாறு அமெரிக்க மற்றும் மேற்காபிரிக்க அதிகாரிகள் கிளர்ச்சிவாதிகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

## தூதுவர் பதவியேற்பு

பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள சிவசங்கர் மேனன் தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார்.

சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை நேற்று முன்தினம் சந்தித்து அவர் தனது நியமனக் கடிதத்தை கையளித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகலினால் பரஸ்பரம் தூதுவர்கள் வெளியேறியிருந்தமை தெரிந்ததே.



கிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலிய இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து இஸ்ரேலிய விமானப் படையின் குண்டுத் தாக்குதலால் தெற்கு லெபனானில் எழும் புகை மண்டலம்.



பாக்தாத் வீதியில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் சேதமடைந்த 82ஆவது விமானப்படையின் வாகனத்திலிருந்து ஆயுதங்களை அகற்றும் அமெரிக்க இராணுவப் பொலிசார்.

# பஸ்ராவில் எரிபொருள் தட்டுப்பாடு; மக்கள் வீதிகளிலிறங்கிப் போராட்டம்

## - பிரிட்டிஷ் படையினர் தாக்கப்பட்டனர்

ஈராக்கில் இரண்டாவது பெரும் நகரமான பஸ்ரா நகரில் எண்ணெய்த் தட்டுப்பாடு, மின்சார பற்றாக்குறை என்பன காரணமாக ஆத்திரமடைந்து வன்முறையில் ஈடுபட்ட மக்களை கலைந்து போகச் செய்வதற்காக பிரிட்டிஷ் துருப்புகள் நேற்று முன்தினம் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இக்கலவரத்தின் போது பொது மக்களின் கல்வீச்சினால் சில பிரிட்டிஷ் துருப்புகள் காயமடைந்துள்ளனர். அன்றையதினம் மாலை வீதிகளில் மக்கள் ரயர்களைப் போட்டு தீ மூட்டினர். பிரிட்டிஷ் இராணுவம் சுட்டதில் துப்பாக்கி ஏந்திய ஈராக்கிய நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இராணுவ வாகனம் ஒன்றும் தீமூட்டி எரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சதாமின் உள்துறை அமைச்சர் அமெரிக்காவிடம் சரண்

## - முன்னைய தகவலில் பிழை!

ஈராக்கின் சதாம் ஹுசைன் ஆட்சியவையில் உள்துறை அமைச்சராக இருந்துவரும் சதாமுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவருமாகிய மெக்முக்நியாப் அமெரிக்கப்படைகளிடம் சரணடைந்துள்ளார். சதாமின் ஆட்சியை அகற்றிய அமெரிக்கா ஈராக்கில் முகாமிட்டு சதாம் உள்ளிட்ட முக்கிய தலைவர்களைத் தேடி வருகின்றது. இதனிடையே சதாமின் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகப் பணியாற்றிய மெக்முக்நியாப் அல் அகமட் என்பவர் பாக்தாத்தில் அமெரிக்க இராணுவத்திடம் நேற்று முன்தினம் சரணடைந்துள்ளார்.

கடந்த யூலை மாதம் மெக் முக் கைது செய்யப்பட்டதாக அமெரிக்கா முன்னர் செய்தி வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.



அண்மையில் யகார்த்தாவில் விடுதி ஒன்றில் ஏற்பட்ட குண்டு வெடிப்பை அடுத்து இந்தோனேசிய சனாதிபதி வாசஸ் தலத்தில் கவச வாகனத்துக் கருகில் காணப்படும் இந்தோனேசிய இராணுவம்.

# சுரங்கப் பாதை அமைத்து 87 கைதிகள் தப்பியோட்டம்

பிறேசிலின் பாதுகாப்புச் சிறைச்சாலை ஒன்றிலிருந்து 87 கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர்.

இக் கைதிகள் சிறைச்சாலையிலிந்து 50 யார் நீளமான சுரங்கப் பாதையொன்றை காட்டுப்பகுதிவரை அமைத்தே தப்பிச்சென்றுள்ளனர். என பிரேசில் பொலிசார் தெரிவித்துள்ளனர். இரண்டு கட்டடங்கள் மற்றும் கண்காணிப்புக் கோபுரம் அடங்கிய சிறைச்சாலை சுவரையும் தாண்டிச்செல்லும் வகையிலே இச் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. தப்பிச்சென்றோரில் 03 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோரைத்தேடும் நடவடிக்கைகளில் பொலிசார் ஈடுபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# குளிர்பான உரிமங்கள் ரத்துச் செய்யப்படலாம்

## - மத்திய அமைச்சர் கருத்து

(புதுடில்லி)

கொக்கோ கோலா,பெப்சி போன்ற குளிர்பானங்களில் அனுமதிக்கப்பட்ட அளவை விட பூச்சிக் கொல்லி மருந்துகள் கலந்திருப்பதால் தயாரிப்பு நிறுவனங்களின் உரிமைகள் ரத்துச்செய்யப்படலாம் என மத்திய உணவு பதப்படுத்தும் துறை இணையமைச்சர் சண்முகம் கூறியுள்ளார்.

அரசியல்வாதிகளும் மற்றும் சுற்றுச்சூழல் மையமும் குளிர்பான ங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பது குறித்து பிரச்சாரம்செய்வதை நிறுத்தக்கோரி பெப்சி நிறுவனத்தின் மனு டில்லி உயர் நீதிமன்றத்தில் இன்று விசாரணை செய்யப்படவுள்ளது.

# இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு தீவிரவாதிகள் தலைநகரைத் தாக்கலாம்!

## - பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(புதுடில்லி)

இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட்-15ஐ முன்னிட்டு தலைநகர் புதுடில்லியில் பெருமெடுப்பிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தீவிரவாதிகளின் தாக்குதல்கள் குறித்து தகவல்கள் வெளியானதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் சுதந்திர தினத்தன்று ஏவுகணைகளைப் பயன்படுத்தியோ அல்லது சிறிய விமானங்களைப் பயன்படுத்தியோ தாக்குதல்களை நடத்தலாம் என்றும் இதற்கான திட்டங்கள் குறித்த தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் புலனாய்வுப்பிரிவு படைத்தரப்பை எச்சரித்துள்ளது.

இந்நிலையில், தலை நகரின் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதிருந்தே படையினர் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.



ஜப்பான் ஹொன்சு தீவில் வீசிய கடும் காற்றில் தமது குடையுடன் போராடும் ஜப்பானியர் (இக்காற்றினால் நால்வர் பலியாகியும் மேலும் நால்வர் காணாமலும் போயுள்ளனர்)

## - அரச ஊழியருக்கு அநீதியிழைத்த -

# உச்ச நீதிமன்றத் தீர்ப்பை சாடுகிறார் சட்டமா அதிபர்!

வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தார்மீக உரிமை தொழிலாளர்களுக்கும் அரசாங்க ஊழியர்களுக்கும் இல்லை என்ற உச்ச நீதிமன்றத்தின் கருத்து அவசியமற்றது என்றும் புரிந்துகொள்ள முடியாதது என்றும் சட்டமா அதிபர் சோலி சிராஜி தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைந்த பேரம் செய்யும் உரிமையும், வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் துணை உரிமையும் ஊழியர்களின் மதிப்பிட முடியாத உரிமைகள் என்றும் பல ஆண்டுகளாகப் போராடி முயற்சி செய்தே இந்த உரிமைகளை தொழிலாளர்கள் பெற்றார்கள் என்றும் தங்களது குறைகளுக்குத் தீர்வுகாண பயனுள்ள வழிகள் இல்லாதபோது வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.



ஸ்பெயினில் ஏற்பட்ட காட்டுத்தீயை அணைக்கும் முயற்சியிலீடுபடும் விமானம் ஒன்று.



# இடதுசாரிகள் எனக்கூற ஜே.வி.பி.யினர் எந்த அருகதையும் அற்றவர்கள்

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகவும் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகவும் இடதுசாரி முன்னணி தேசிய அமைப்பாளர் வாசுதேவநாணயக்கார ''தினமின'' சிங்கள நாளிதழுக்கு வழங்கிய பேட்டி.

மொழியாக்கம் : **சக்திவேல்**

சர்வதேச இடதுசாரி இயக்கங்கள், ஜே.வி.பி.யினரை இடதுசாரி இயக்கத்தின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவில்லை.

அவர்கள் இடதுசாரிகள் எனக் கூறுவதற்கு எந்தத் தகுதியும் இல்லாதவர்கள் என்கிறார், சனநாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார.

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் பல தரப்பட்ட அரசியல் நோக்கங்கள் கொண்டபலர் உள்ளனர். அவர்களும் தற்பொழுது அரசு மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகளுக்குத் தமது பூரண ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். எக்காரணம் கொண்டும் தற்பொழுது ஆரம்பித்துள்ள சமாதான நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு சனநாயக இடதுசாரி முன்னணியினர் இடம் கொடுக்க மாட்டார்கள் என மேலும் அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யினரை நான் இடதுசாரிகள் என ஏற்றுக்கொள்ளமாட்டேன். அக்கட்சியில் தமிழர்கள் அங்கம் வகிக்கவில்லை. தமிழர்களின் ஒத்துழைப்பு ஜே.வி.பி.யினருக்குக் கிடையாது. வட-கிழக்கு மக்கள் கோரும் உரிமைகளை ஜே.வி.பி.யினர் கொடுக்க மறுக்கின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிராகரிக்கின்றனர். இன்று ஜே.வி.பி.யினரின் அரசியல் யுத்தத்திலும், இனவாதத்திலும் ஏகாதிபத்திய வாதிகளுக்குத் தாளம் போடும் ஒரு பிற்போக்கு சக்தியாகவே தங்களை இனம்காட்டி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளைப் பற்றி தப்பபிப்பிராயங்களை சிங்கள மக்களிடையே ஏற்படுத்தி அவர்கள் மனதில் பெரும் பயத்தை உண்டு பண்ணுவதற்கு ஜே.வி.பி. தற்பொழுது பிரச்சார வேலைகளில் ஈடுபட்டுவருகின்றது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் நாட்டின் சகல மக்களையும் ஒரு நிம்மதியான வழியில் செல்வதற்கு பாதையைத் திறந்துள்ளது. முன்பு எத்தனையோ ஒப்பந்தங்களை அரசுகளும், விடுதலைப்புலிகளும் மேற்கொண்டும் அவை தோல்வியில் முடிந்ததை எவரும் மறக்கவில்லை. உலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் இந்த இரு பகுதியினருக்கும் நல்லதொரு பாடமாக அமைந்துள்ளன.

விடுதலைப்புலிகளும் அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது, நாட்டைக்காட்டி கொடுக்கும் செயல் என சிலர் கூறுகின்றனர்.

எங்களிடம் காட்டிக் கொடுப்பதற்கு ஒன்றும் கிடையாது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்பு வட-கிழக்கில் விடுதலைப் புலிகள் பல இடங்களை தமது இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அப்பிரதேசத்திற்குள் எவரும் போக முடியாது. விடுதலைப்புலிகளுக்குச் சொந்தமான இராணுவப் பிரதேசங்கள் உள்ளன. அதிசக்தி வாய்ந்த இராணுவக் கட்டமைப்பு அவர்களிடம் உள்ளது. ஒன்று யுத்தம் அல்லது சமாதானம். யுத்தத்தில் எந்தப் பிரயோசனமும் இல்லாதபடியால், தற்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன. இதை நாங்கள் வரவேற்கின்றோம்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக நகல திட்டத்தில் ஒரு பிரதேச சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்குக் குறைவான தொரு அதிகாரங்களையே கொடுக்கப்பட்டுள்ளது. காணி சம்பந்தப்பட்ட பிரச்சினையை அரசு தம்மிடம் வைத்துள்ளது. வருமானம், சுயாட்சி நிர்வாகத்தின் கீழ் வரவேண்டும். இவைகள் அதில் சுட்டிக்காட்டப்படவில்லை. அரசாங்கம் முன்னர் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிய கடிதங்கள் குறித்து எந்த இணக்கப்பாட்டுக்கும் புலிகளால் வர முடியாமல் போனபடியால் புலிகள் நிராகரித்து விட்டனர்.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்குக் கொடுக்கப்போகும் இடைக்கால நிர்வாகத் திட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாமல்போய்விட்டால், அது துரதிர்ஷ்டமாகும். அரசு செய்ய வேண்டிய வேலை, அரச நிர்வாகிகளுக்கு நல்ல அறிவுரைகளைக் கூறி புலிகளோடு சேர்ந்து அவர்களின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பை கொடுங்கள். அரசாங்க பொலிசாரும், விடுதலைப்புலிகளின் பொலிசாரும், ஒன்றிணைந்து செயற்படுவது முக்கியம். ஆயுதங்களைக் கீழேவையுங்கள் என்று சொல்வது அவர்களின் பலத்தை குறைப்பதாகும். எந்த ஒரு போராளி அமைப்பும் ஆயுதங்களைக் கீழே வைக்க மாட்டார்கள். பயங்கரவாதத்தை புலிகள் கைவிட்டு சமரசபேச்சு வார்த்தைகளுக்கு வரும்படி அமெரிக்கா அடிக்கடி கூறுகிறது. இது சம்பந்தமாகத் தீர்மானம் எடுப்பது அரசுதான், அமெரிக்கா அல்ல என மேலும் அவர் கூறினார். ஜே.வி.பி. பிரச்சார செயலாளர் சமீப காலங்களில் ஒரு யுத்தத்திற்கு தயாராகுங்கள் எனக் கூறி வருவது குறித்து வாசுதேவநாணயக்கார கருத்துக் கூறுகையில்; எந்த ஒரு இணக்கப்பாடுகளுக்கும் வராவிட்டால் யுத்தத்தைத் தவிர வேறு என்ன கூறமுடியும்? வயிற்றில் முட்டையை வைத்துக் கொண்டு, அரசியல் பேச வேண்டாம். நேர்மையாகக் கதையுங்கள்; விசர்பிடித்த மாதிரி கதைக்க வேண்டாம் இதுவே அவர்களுக்கு கூற விரும்புகிறேன்.

இந்த நாட்டில் இனவாதத்தை வளர்த்தவர்கள் பண்டாரநாயக்கர்களும், சேனாநாயக்கர்களும் ஆவார்கள். இவர்களின் ஆட்சியை எந்த ஒரு இடதுசாரிகட்சிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் உலகில் உள்ள இடதுசாரி மாக்சிஸ கொள்கைகளைக் கொண்ட நாடுகள், ஜே.வி.பி.யினரை இடதுசாரிகள் என ஏற்றுக் கொள்ளவில்லை. இங்குள்ள இடதுசாரி இயக்கங்களும் ஜே.வி.பி. யினரைத் தங்களோடு இணைத்து கொள்ளவில்லை. ஜே.வி.பியின் பல்கலைக்கழக மாணவ அமைப்புகளை ஏற்படுத்தி நாட்டில் சனநாயக விரோத செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்கள் மூலம் நாட்டில் பெரும் கலவரத்தை உண்டு பண்ணுவதற்கு முயற்சி செய்கின்றனர். இவர்கள் இப்படியானதொரு செய்கைகளை ஏற்படுத்திக்கொண்டு விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தை குறை கூறுகிறார்கள். இதைப்பற்றி குறை கூறுவதற்கு இவர்களுக்கு எந்தத் தகுதியும் கிடையாது.

சமாதானத்தை நிலை நாட்டுவதற்கும். இதை முன்னெடுத்துச் செல்வதற்கும் எல்லா மக்களையும் ஒன்று திரட்ட வேண்டும். அப்படி பேச்சுவார்த்தைகளில் தோல்வி ஏற்பட்டால் அவர்களை மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு ஈடுபடுத்துவது எமது கடமையாகும். ஆனபடியால், ஜே.வி.பி. யினரை இடதுசாரிகள் என நான் கூறமாட்டேன். ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக இந்த நாட்டில் எந்த எதிர்ப்பு கோஷங்களும் தெரிவிக்கவில்லை. இவர்கள் மாக்சிஸ வாதிகள் அல்ல. பிற்போக்கான இனவாதிகளாவர். நாட்டின் இனவாதி களோடு இணைவதால் இவர்கள் அரசியல் அநாதைகளாகி விடுவார்கள்.

மற்றது. அரசு நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்த எல்லா மக்களையும் இதில் பங்காளிகளாக்க வேண்டும். தமிழ், சிங்கள மக்கள் ஒன்று கூடி அரசு மேற்கொள்ளும் சமாதானப் பேச்சுக்களுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். □

## பொ.ஐ.மு.வின் கீழுள்ள மாகாண சபைகளை கலைப்பதற்கான தேவை தற்போது எழவில்லை

### பொதுச் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியின் கீழுள்ள மாகாண சபைகளை தேவையேற்பட்டால் கலைப்பது குறித்து செயற்குழுத் தீர்மானிக்கும் என இக்கட்சியின் பொதுச் செயலாளர் தி.மு. ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளைக் கலைத்து அவசர தேர்தலொன்றை நடத்த வேண்டிய தேவை தற்போது எழவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்ட ரீதியாக மாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்த பின்னரே அவற்றுக்கான தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜே.வி.பி.- சுதந்திரக் கட்சிக் கூட்டணி இடம் பெறும் பட்சத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியின கீழுள்ள மாகாண சபைகளில் ஒன்றையோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவைகளையோ கலைத்து அதற்கு தேர்தல் நடத்துவதன் ஊடாக தங்களது கூட்டணியின் பலமறிய சனாதிபதி திட்டமிட்டிருந்ததாக செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும், ஜே.வி.பி.-சு.க.கூட்டணி உருவாக்கப்படுவதில் தொடர்ந்து இழுபறிநிலை காணப்பட்டு வருகின்றமை தெரிந்ததே.

## மீன் வளம் அழிந்துபோவதை தடுப்பதற்கு அரசு முயற்சி

(கொழும்பு)

மீன் வளத்தை முற்றாக அழிக்கும் மீன்பிடி முறைகளைத் தடை செய்யும் சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று கடற்றொழில் மீன்பிடி அமைச்சர் மஹிந்த விஜேசேகர பாராளுமனறத்தில் தெரிவித்தார். மீன்வர்கள் கடைப்பிடிக்கும் சில மீன்பிடி முறைகள் காரணமாக எதிர்காலத்துக்குரிய மீன் வளம முற்றாக அழிந்துவிடும் நிலை ஏற்பட்டிக்கின்றது.

சுமார் 12 கிலோகிராம் வரை வளரக்கூடிய மீனினத்தை சாதாரணமாக 200 கிராமேனும் வளர்ச்சியடையாத நிலையில் பிடிக்கின்றனர். அவ்வாறு பிடிக்கும்போது அந்த மீனினம் முற்றாக அழிந்து வருகின்றது. இவ்வாறு பாதகமான மீன்பிடி முறைகளைத் தடுக்கும் சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## குடிபோதையில் பிள்ளைகளைத் தாக்கும் மனைவி குறித்து கணவன் முறைப்பாடு

மதுப்பழக்கமுள்ள மனைவியிடமிருந்து தன்பிள்ளைகளைக் காப்பாற்றுமாறு கணவன் ஒருவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

1998ஆம் ஆண்டிலிருந்து மதுப்பாவனைப் பழக்கமுள்ள தன் மனைவி கடந்த சில வாரங்களாகக் கடுமையாகக் குடித்துவிட்டு வந்து தனது 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை அடித்து துன்புறுத்துவதாகக் கூறியுள்ளார்.

அரியாலைப் பகுதியில் வசித்து வரும் இக்குடும்பத்தில் நேற்றுமுன்தினம் மதியம் நீர் அருந்துவதற்காக வீட்டிற்குள் சென்ற தன் மகனை மனைவி கடுமையாகத் தாக்கி சோர்வுற்று வீழ்ந்து கிடந்த மகனின் கழுத்தில் காலால் மிதித்துள்ளார். இதனைத் தொடர்ந்தே கணவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (33)

## பாண் சாப்பிடுவதை நிறுத்தி அரிசிச் சோற்றை உண்க

### அமைச்சர் திஸாநாயக்க கோரிக்கை

(கொழும்பு)

பாண் சாப்பிடுவதை நிறுத்தி நெல் அரிசிச் சோற்றைச் சாப்பிடுமாறு அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மக்களைக் கேட்டுள்ளார்.

கடந்த இரண்டு போகங்களிலும் உயர்வாக நெல் விளைச்சல் கிடைக்கப் பெற்றுள்ளது. மக்கள் அனைவரும் நெல் அரிசிச் சோற்றைச் சாப்பிடுவதன் மூலம் விவசாயிகளுக்கு நன்மை செய்ய முடியும்.

கடந்த இரு போகங்களிலும் 3.1 மில்லியன் மெற்றிக் தொன் நெல் விளைந்துள்ளது. எமது நாட்டின் வருடாந்த அரிசித் தேவை இரண்டு மில்லியன் மெற்றிக் தொன்களாகும்.

இதேவேளை மேலதிகமாகவுள்ள அரிசியில் ஒரு பகுதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் ரவீந்திர குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## கட்சி அலுவல்களைக் கவனிக்க வேண்டியுள்ளது; கூட்டணி அமைக்கும் பேச்சிற்கு நேரமில்லை!

### ஜே. வி.பி.யினரிடம் சனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி.யுடனான கூட்டணியமைப்பது தொடர்பான பேச்சுக்களை முன்னெடுப்பதில் இழுத்தடிப்புக்களை செய்து வருகின்றார்.

அண்மையில் சனாதிபதியைச் சந்தித்த ஜே.வி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினர்களான ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச ஆகியோருக்கு பேச்சுக்கள் தொடர்பாகக் கூறிய பதிலில் தமது கட்சியின் அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருப்பதால் கூட்டணி தொடர்பான பேச்சுக்களில் கலந்துகொள்ள நேரம் கிடைக்காது என்று கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சிறிலங்கா சுகட்சியின் பிரதிநிதிகளும் மௌனம் சாதிப்பதாக அறிய வருகின்றது.

இதற்கிடையில் தமிழ்க்கட்சிகள் சில பொ.ஐ.மு. ஆட்சியமைக்கும் வகையில் தாம் சனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக கூறியிருக்கின்றமையும் நோர்வேயை சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து அகற்றுமாறு ஜே.வி.பி.யினரின் கோரிக்கையை நிராகரித்துள்ளமையும் கூட்டணியில் பதவிப் போட்டி தொடர்பாக எழுந்துள்ள கருத்து வேறுபாடும் மேற்படி பேச்சுக்கள் ஆமை வேகத்தில் செல்வதாக சண்டே ரைம்ஸ் கருத்து வெளியிட்டுள்ளது.

## இலஞ்ச தடுப்பு ஆணைக்குழு சட்டத்தை மாற்றியமைக்க முடிவு

(கொழும்பு)

இலஞ்சத்தடுப்பு ஆணைக்குழுவின் சட்டத்தை மாற்றி அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. உத்தேச திருத்தச் சட்டத்தின்படி ஆணைக்குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து ஐந்தாக அதிகரிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். தற்போது உயர்நீதிமன்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மட்டுமே ஆணைக்குழுவில் அங்கத்தவர்களாக இருக்க முடியும். ஆனால், திருத்தச் சட்டத்தின்படி மேல் நீதிமன்ற நீதிபதிகளும் இவ் ஆணைக்குழுவில் அங்கத்தவர் பதவி வகிக்க முடியும்.

# வடக்கே 5 இலட்சம் தென்னைகள் அழிப்பு; பாரபட்சமின்றி அரசு இழப்பீடு அளிக்க வேண்டும்!

## - வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கம் பிரதமருக்கு மகஜர்

**நாட்டின் இனமுரண்பாடு காரணமாக இடம்பெற்ற யுத்தத்தின்போது வட பகுதியின் பெரும் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமாக இருந்த 5 இலட்சத்துக்கு மேற்பட்ட தென்னைமரங்கள் இராணுவ நடவடிக்கைகளுக்காக அழிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த இழப்பு 2500 கோடி ரூபாவாகும். இதனை ஈடுசெய்ய அரசாங்கம் வடமாகாண தெங்குச் செய்கையாளர்களுக்கு உதவவேண்டும்.**

இவ்வாறு வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இந்து சமய கலாச்சார அமைச்சர் தி. மகேஸ்வரன் ஊடாக கடந்த வெள்ளியன்று அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கத்தின் தலைவர் அ. நல்லதம்பி செயலாளர் ஆர். பத்மநாதன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அம்மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

வடமாகாணத்தில் பச்சிலைப் பள்ளி மற்றும் தென்மராட்சி பிரதேசங்களில் பெருமளவில் நூற்றுக் கணக்கான தெங்கு செய்கையாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தென்னைமரங்கள் வெட்டி அழிக்கப்பட்டதன் காரணமாக இதனை நம்பியிருந்த தெங்கு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் வேலையாளர்கள் மிகப் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வாழ்வாதாரத்துக்கான வருமானம் இல்லாது போய்விட்டது.

இத்தகையவர்கள் 1990முதல் இற்றைவரையான பதின்மூன்று வருடகாலம் எத்தகைய வருமானமும் அற்ற நிலையில் இருக்கிறார்கள். இவர்களை நம்பியிருந்த குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வுக்கே பெரும் கஸ்டங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

தெங்குச்செய்கையாளர் கடந்த பதின்மூன்று வருடங்களாக தமது துன்பங்கள், துயரங்கள், மன உளைச்சல்கள் மற்றும் விரக்திகள் பற்றி பிரதமராகிய தங்களுக்கும் பெரும் தோட்ட அமைச்சர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஆகியோருக்குபல மகஜர்களையும் வேண்டுகோள்களையும் விடுத்துள்ளபோதும் கூட எமது கோரிக்கைகள் எதுவும் இதுவரை கவனத்தில் எடுக்கப்படவில்லை.

எனவே நாட்டில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக அழிக்கப்பட்ட தென்னைமரங்களுக்கான நட்ட ஈட்டினை அரசு இனியும் தாமதமின்றி வழங்க வேண்டும். பச்சிலைப்பள்ளி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளிலுள்ள தெங்குத் தோட்டங்களில் நிலை கொண்டுள்ள இராணுவம் உடனடியாக அங்கிருந்து வெளியேறவேண்டும். தெங்குத் தோட்டங்களுக்கு ஏற்பட்ட அழிவுகள், சேதங்கள் பற்றிய மதிப்பீடுகளை ஒரு தொழில்சார் குழு நியமிக்கப்பட்டு மேற்கொள்ளவேண்டும்.

அழிந்த நிலையில் இன்று காணப்படும் தெங்குத் தோட்டங்களை மறு சீரமைப்புச் செய்ய வசதியாக இராணுவம்அங்கிருந்து வாபஸ் வாங்கப்படல் வேண்டும். தெங்குத் தோட்டப் பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும்.

மேலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் ஆரோக்கியமான பங்களிப்புச் செய்து வந்த தெங்குச் செய்கையாளர்கள் யுத்தம் காரணமாக முடக்கப்பட்ட நிலைக்கு ஆக்கப் பட்டுள்ளனர். ஈராக் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களுக்கு அரசாங்க நிவாரணம் வழங்க விசேட திட்டத்தினை அண்மையில் அமுல் செய்தது.

ஆனால், தெங்குச் செய்கையாளர்களுக்கோ பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. தேயிலை, றப்பர் செய்கையாளர்களைப் போலவே தெங்குச் செய்கையாளர்களாகிய நாமும் தேசிய உற்பத்திக்கும், அபிவிருத்திக்கும் பங்களிப்புக்களைச் செய்தவர்களாகவேயுள்ளோம். இந்த நிலையில் எமக்கு மட்டும் ஏன் இந்த பாரபட்சம் காட்டப்படுகின்றது. என்பது பற்றி புரியாமலுள்ளது.

எமது தோட்டங்களுக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கும், சேதங்களுக்கும் நட்டஈடு வழங்கப்படாவிடில் அதனை சட்ட ரீதியாக எவ்வாறு பெறக்கூடும் என்பது பற்றி நாம் ஆலோசிக்கவும் செயற்படவும்நிர்ப்பந்திக்கப்படுவோம். எனவே எமது வாழ்வாதாரப் பிரச்சினை தொடர்பாக நாட்டின் பிரதமராகிய தாங்கள் கருணைகூர்ந்து, கவனம் எடுத்து எமக்கு உதவ வேண்டும் எனக் கோருவதுடன், அழிக்கப்பட்ட தெங்குத் தோட்டங்களின் மறு சீரமைப்புத் திட்டத்துக்கு ஐந்து ஆண்டுத் திட்டம் ஒன்றினையும் ஆவன செய்யுமாறும் வேண்டுகிறோம் எனவும் கூறப்பட்டுள்ளது.

## அரும்பொருட் காட்சிச்சாலை

பூர்வீக குடியினருக்கானஅரும் பொருட் காட்சிச்சாலை ஒன்று நிறுவப்படவுள்ளது, வேகமாக அருகி வரும் பூர்வீக சமூகத்தினர் பற்றிய தகவல்களை எதிர்கால சந்ததிக்கு உணர்த்துவதற்காக இந்த அரும் பொருட்சாலை அமைக்கப்படவுள்ளது.மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சின்முயற்சியின்பேரில் இந்த காட்சிச்சாலை பத்துலட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது.

## சினைப்படுத்தல் சேவை

2003ஆம் ஆண்டு யூலை மாதத்தில் முல்லைத்தீவு கால்நடை வைத்தியர்பிரிவிற்குட்பட்ட விசுவமடுப் பிரதேசத்தில் 26 பசுக்களுக்கும்,22ஆடுகளுக்கும் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் கருவூட்டல் சேவை வழங்கப்பட்டதாக தமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலக செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

## பிரதேச சபையின் செயற்பாடு

வவுனியா வடக்கு பிரதேச சபையினர் சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான சில வேலைத்திட்டங்களை அண்மையில் மேற்கொண்டனர். கடந்த 6ஆம் திகதிதொடக்கம் 9ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கட்டாக்காலி -நாய்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், இக்காலப் பகுதியில் உணவகங்களில் தொழில் புரிவோருக்கு நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன் குடற் புழுவிற்கான தடுப்பு மருந்தும் வழங்கப்பட்டது.

# கல்மடுநகர் பகுதி வரை பேருந்து சேவை நடைபெறுமா?

(வட்டக்கச்சி)

இராமநாதபுரம் கல்மடுப் பகுதிக்கு பயணிகள் பேருந்துச் சேவை இன்மையால் அப்பகுதி மக்கள், போக்குவரத்து தொடர்பாக பல அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

வைத்தியசாலை தேவைகள் உட்பட பல தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.தற்போது இராமநாதபுரம் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 6.00 மணிக்கு புளியங்குளத்திற்கான பேருந்தும், 7.00 மணிக்கு கந்தபுரத்திற்கான பேருந்துச் சேவையும் நடைபெறுகின்றன. மீண்டும் இவ் விடத்திற்கு இரவு 8.30 மணிக்கும் 6.00 மணிக்கும் பேருந்துகள், வந்தடைகின்றன.

மக்கள் 4.5 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து இராமநாதபுரம் ம.வித்தியாலயப் பகுதிக்கு வரும் போது பேருந்துகள் புறப் பட்டு விடும். இதனால் தாம் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற் படுவதாகவும், இரவு 8.30 மணிக்கு புளியங்குளம் பேருந்து வருவதால் தாம் அவ்விடத்தில் வந்திறங்கி இருட்டில் கண்ணைக் கட்டி இறக்கி விட்டது போல திக்கு முக்காடுவ தாகவும், நீண்ட தூரத்திற்கு நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படுவ தாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர். எனவே பேருந்து சேவையை கல்மடுப்பகுதிக்கு நடத்துவதை சம்பந் தப் பட்டவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் எனக் கேட்கப்படுகின்றனர்.(12)

# தேர்தலுக்கான சாத்தியம் அதிகரிப்பு; முகம்கொடுக்க ஜே.வி.பி தயாராகிறது

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் எச்சந்தர்ப்பத்திலும் தேர்தல் ஒன்று வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

அவ்வாறான ஒரு தேர்தலுக்கு ஜே.வி.பி எந்த நேரத்திலும் முகம் கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மக்கள் விடுதலை முன்னணி நாடளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒற்றுமை சீகுலைக்கப்பட்டுவிட்டது.

அதுமட்டுமல்லாது, நாடளாவிய ரீதியில் சிங்கள, முஸ்லிம் மக்களின் உயிருக்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை,

இந்த நிலைதொடராதிருக்கவும் உயிருக்கு அஞ்சி வாழும் மக்களைக் காப்பாற்றுவதற்கும் புதிய அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கு காலம் கனிந்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

# கட்டட, வீதி திறப்பு விழா காலவரையறையின்றி நிறுத்தம்

ஜப்பானின் நிதி உதவியைக் கொண்டு ஊவா மாகாணம் கொடகாவலையில் நிறுவப்பட்ட பொருண்மியக் கட்டடம் ஒன்றினதும் வீதியொன்றினதும் திறப்புவிழா அரசியல் காரணங்களினால் காலவரையறையின்றி நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த திறப்புவிழா தொடர்பான அறிவிப்புப் பலகைகளிலும் அழைப்பிதழிலும் வெவ்வேறு அரசியல்வாதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்ததால் இந் நிலையேற்பட்டது.

வெளிநாட்டு உதவிகள் மூலம் பொது மக்களுக்குக் கிடைக்கப்பட வேண்டிய நன்மைகள் சிறிலங்காவின் இரு பெரும் அரசியல் கட்சிகளினதும் போக்கு காரணமாக அவர்களை சென்றடையாதுள்ளமை பற்றி அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

# யாழ். மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறுவோர் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றப் பின்னடிப்பு

## வட-கிழக்கு மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் மருத்துவர்கள் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு பின்னடிப்பது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், வெளிமாவட்ட மருத்துவர்களில் தங்கி இருக்க வேண்டிய நிலை யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றதென வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை கூறியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 10 பேர் கூடப் பணியாற்ற முன்வருவதில்லை. பெரும்பான்மையானோர் கண்டி, காலி, கொழும்பு போன்ற மருத்துவமனைகளுக்கு நியமனம் பெற்றுச் செல்கின்றனர் என்றும் அவர் விசனம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறையால் பல பிரிவுகளுக்குரிய செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சதுர்முகன் கூறியுள்ளது தெரிந்ததே.

# அறணைக்கடிக்கு இலக்கான பெண் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதி

தருமபுரம் உழவனூர் பகுதியில் அறணைக்கடிக்கு இலக்கான பெண் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். கடந்த வெள்ளிக்கிழமை பகல் உறக்கத்திலிருந்த இராமையா இராஜேஸ்வரி என்ற குடும்பப் பெண்ணே அறணைக்கடிக்கு இலக்கானவராவார். (14)

# கிளிநொச்சி மாவட்டத்தில் துடுப்பாட்ட சங்க அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்ட (கிரிக்கெட்) சங்க அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் 28ஆம் திகதி கிளி. மாவட்ட விளையாட்டு அதிகாரி கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பி.ப. 4.00 மணிக்கு வன்னி விளையாட்டுத் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளதெனவும், ஆர்வமுள்ள கிளி. மாவட்ட சகல விளையாட்டுக் கழக அங்கத்தவர்களை அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட விளையாட்டு அதிகாரி வேண்டியுள்ளார்.(சோ)



முறிகண்டிப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை படங்களில் காண்க. வீதியோரமாக வாகனங்கள் தரித்து நிற்பதால் இந்த நெரிசல் ஏற்படுவதோடு, விபத்துக்களும் சம்பவிக்க வாய்ப்பாக அமைகிறது.

# ஜனகபண்டார தென்னக்கோன் தேடப்படுகின்றார்

தம்புள்ள ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவரைத் தாக்கியது தொடர்பாக மாத்தளை மாவட்ட பா.உறுப்பினரான ஜனகபண்டார தென்னக்கோன் என்பவர் தேடப்படுவதாகக் கூறப்படுகிறது.இவரைக் கைது செய்யுமாறு தம்புள்ள மஜிஸ்ரேட் நீதிபதி பொலிசாருக்கு பணித்துள்ளதை அடுத்து கொழும்பிலுள்ள மாத்தளைப்பகுதியிலும் தேடுதல் நடைபெற்று வருகின்றவேளையில் மேலும் பல பொ.ஐ.மு.ஆதரவாளர்களுடன் இவர் தலைமறைவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

# காஞ்சிரங்குடாவில் அதிரடிப் படையினர் வெறியாட்டத்தில் பலியானோருக்கு இழப்பீடு!

## – நீண்ட தாமதத்தின் பின் அரசு இணக்கம்

**அம்பாறை மாவட்டத்திலுள்ள காஞ்சிரங்குடா படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்ட ஏழு பேரின் குடும்பங்களுக்கும், படுகாயமுற்றோருக்கும் நஷ்டஈடு வழங்க சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.**

தமிழர் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தலைமையில் அரியநாயகம் சந்திரநேரு, பிரதமரை புதன்கிழமை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசியதன் பயனாக மேற்படி முடிவு கிடைக்கப் பெற்றது.

காஞ்சிரங்குடாச் சம்பவத்தில் படுகொலையுண்டோருக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் நஷ்டஈடு இல்லாமல் தவிக்கும் போது அண்மையில் மூதூர், வாழைச்சேனை போன்ற பகுதிகளில் இடம்பெற்ற இழப்புக்கு நஷ்டஈடுகள் வழங்கப்பட்டிருப்பது குறித்து பிரதமரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதமர் உடனடியாக இழப்பீடு வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரின் அலுவலக உதவிச் செயலாளர் எஸ். பத்மநாதனிடம் கேட்டுக் கொண்டார்.

காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படை முகாம் முன்னால் 09-10-2002 அன்று ஆர்ப்பாட்டப் பேரணியில் சென்ற பொதுமக்கள் மீது விசேட அதிரடிப் படையினர் கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலில் ஏழுபேர் படுகொலை செய்யப்பட்டும், 24 பேர் படுகாயமடைந்தமையும் தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக ஓய்வு பெற்ற எயார் வைஸ்மார்சல் ஹரி குணதிலக தலைமையிலான விசாரணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு அக்கரைப்பற்று நீதிமன்றம் போன்றவற்றில் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இவ்விசாரணையின் பின் உரிய நீதி கிடைக்காவிட்டாலும் நஷ்டஈடாவது கிடைக்காதா என்று ஏங்குவதாகவும் சந்திரநேரு பிரதமரிடம் குறிப்பிட்டார்.

## கைக்கடிகாரம் உங்களுடையதா?

ஓட்டுசுட்டான்- நெடுங்கேணி வீதியில் கடந்த புதன்கிழமை பெண்களுக்கான கைக்கடிகாரம் ஒன்று நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவர்களால் கண்டெடுக்கப்பட்டு நெடுங்கேணி மகாவித்தியாலய அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம்காட்டிப்பெற்றுக்கொள்ளவும் .

## கால்நடை அபிவிருத்திக்கான இடம்பெயர் சேவை

முல்லை. மாவட்டத்தில் இடம்பெறும் கால்நடைகளுக்கான உற்பத்தி அபிவிருத்தி சுகாதார வேலைத்திட்ட இடம்பெயர் சேவையின் கீழ், யூலை 28 முதல் ஆகஸ்ட் 08ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பின்வரும் வேலைத்திட்டங்கள் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் தொண்டை அடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பூசி 1890 மாடுகளுக்கு ஏற்றப்பட்டதுடன், கோழி கொள்ளை நோய்க்கு எதிரான தடைமருந்து 200 கோழிகளுக்கும் வழங்கப்பட்டன.

மேலும் 04 மாடுகள் நலமடிக்கப்பட்டதுடன், 03 மாடுகளுக்கும், 02 ஆடுகளுக்கும், 08 கோழிகளுக்கும் இதர நோய்ச் சிகிச்சையும் அளிக்கப்பட்டது. 03 மாடுகளும், 03 ஆடுகளும் செயற்கை முறையில் சினைப்படுத்தப்பட்டதுடன், வெளிக்கள மருத்துவ சேவையினூடாக 02 மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், 15 மாடுகளுக்கு கர்ப்பப் பரிசோதனை நடாத்தப்பட்டதாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை. மாவட்டச் செயலகம் தெரிவிக்கிறது. (26)

## இருவரிடையே கைகலப்பு இளைஞரொருவர் பலி!

(கொழும்பு)

தெஹிவளை படோபீற்ற பகுதியில் நேற்று முன்தினமிரவு இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இரண்டு இளைஞர்கள் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையிலே இவர் கொல்லப்பட்டுள்ளதாக தெஹிவளை பொலிசார் கூறியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக 05 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## இத்தாலியில் வேலை பெற்றுத்தருவதாக சிங்கள நடிகை ரூ. 50 இலட்சம் மோசடி!

(கொழும்பு)

இத்தாலியில் வேலைதருவதாகக் கூறி 50 இலட்சம் ரூபாவுக்கு அதிகமாகப் பணமோசடி செய்த சிங்கள நடிகையை கைது செய்யும்படி பாதிக்கப்பட்டவர் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

திம்பிரிகஸ்கமுவ என்ற இடத்தில் வசிக்கும் இந்த நடிகை நீர்கொழும்பு கொச்சிக்கடை திம்பிரிகஸ்கமுவ மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள பல இளைஞர்களிடம் இத்தாலியில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பண மோசடி செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணமோசடி செய்த நடிகை அப்பகுதி அரசியல்வாதியுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் பாதிக்கப்பட்டவர்கள் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

வீடு, காணிகளை விற்று இந்தப் பெண்ணிடம் பணம் கொடுத்ததாகத் தெரிவிக்கும் இவர்கள் தாம் நியாயம் கேட்டுச் சென்றால் குறிப்பிட்ட அரசியல்வாதி தலையிட்டு தமது செல்வாக்கைப் பயன்படுத்தி எங்களை விரட்டி வருகின்றார் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## திருத்தியமைக்கப்பட்ட கட்டடத்தில் வைத்தியசாலை இயங்குவது எப்போது?

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி அரசினர் மருத்துவமனையில் திருத்தி அமைக்கப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்படாமையால் மிகவும் சிரமமான நிலை ஏற்பட்டுள்ளது.


ஜெயசிக்குறு நடவடிக்கைகாரணமாக இடம் பெயர்ந்த இம் மருத்துவமனை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள போதிலும் வசதிக்குறைவான கட்டடம் ஒன்றிலேயே தற்போது செயற்பட்டுவருகிறது.

சேதமடைந்திருந்த ஒரு கட்டடம் திருத்தியமைக்கப்பட்டுள்ளபோதிலும் நீர் வசதிசெய்து கொடுக்கப்படாமையால் அதில் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

எனினும் அங்குள்ள பழுதடைந்த நிலையிலுள்ள நீர்த்தொட்டியை புனரமைக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர், தாதியர் நியமிக்கப்படவில்லை.

இங்கு வரும் அவசர நோயாளிகள் மகப்பேற்றுத் தாய்மார் வவுனியா அல்லது புதுக்குடியிருப்பிற்கு அனுப்பி வைக்கப்படுவதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.



தண்ணீர் தாங்கி தற்போதைய நிலை

## ஐ.தே.க.பி. உறுப்பினர் பொலிஸ் மீது தாக்குதல்!

(கொழும்பு)

கண்டி-யட்டிநுவர பிரதேசசபை ஐ.தே.க உறுப்பினர் ஒருவர் பொலிசாரைத் தாக்கியமை தொடர்பாக முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, கண்டி-கொழும்பு வீதியில் பிலிமத்தலாவ நகரில் போக்குவரத்துப்பிரிவு பொலிசார் ஒருவர் கடமையிலிருந்த வேளை அங்கு போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்த நிலையில்காணப்பட்டது. நகரின் மத்தியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றினாலேயே மேற்படி ஸ்தம்பிதமடைந்தது. நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தை அகற்றுமுகமாக வாகனத்தருகே சென்ற பொலிசார் சாரதியைக் காணாததால் வாகனத்திலிருந்த ஒலியை (கோன்) இயக்கியுள்ளார். உடனே வாகனத்தருகே சாரதி வந்ததும் விரைவாக வாகனத்தை எடுக்குமாறு பொலிசார் பணித்துள்ளனர். எனினும் சாரதி தம்மை ஒரு பிரதேசசபை உறுப்பினர் என்று கூறி பொலிசாரைப் பலமுறைத் தாக்கியுள்ளார்.

இதனால் காதில்பாதிப்படைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் வைத்தியசாலை[illegible] அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேக நபரான பிரதேசசபை உறுப்பினர் தலைமறைவாகியுள்ளார்.

## தேசிய எழுச்சிப் பேரவையின் முள்ளியவளை கோட்ட சங்கமம்

முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு சிறப்புற நடைபெற்றுள்ளது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இ. சரவணன் தலைமையில் இது ஆரம்பமானது.

பொதுச்சுடரினை கரைதுறைப்பற்று பிரதேச உதவி அரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கு.தமிழ்நிலவு ஏற்றி வைத்ததையடுத்து மேடையில் வைக்கப்பட்டிருந்த முதல் மாவீரர் சங்கரின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் தமிழரசியின் தந்தையார் அமுதராசா ஈகச்சுடரினை ஏற்றி மலர்மாலை அணிவித்து வைத்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ச.கனகரத்தினம், இணைச்செயலாளர் கி. தியாகராசா பொருளாளர் ஜெகதீஸ்வரன், உதவிஅரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழ்நிலவு ஆகியோர் கருத்துரைகள் நிகழ்த்தினர். கோட்டத்திற்குட்பட்ட 24 தேசிய எழுச்சிப் பேரவை ஊரக கிளை செயலாளர்கள் அறிக்கைகள் வாசித்ததையடுத்து, சிறப்புரையினை முல்லைமாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் நிகழ்த்தினார். (ஆ)

## 116 வெளிநாட்டவரை உடன் நாடு கடத்த சிறிலங்கா உள்துறை அமைச்சு பணிப்பு!

### – ஜூலை முதல் 674 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்லமுயன்ற போது கைதுசெய்யப்பட்ட 116 வெளிநாட்டவர்களையும் உடனடியாக நாடுகடத்துமாறு சிறிலங்காவின் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக வெளிநாட்டு தூதரகங்களுடன் கலந்துரையாடுமாறும் அவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த ஜூலை முதலாம் திகதி முதல் இதுவரை கைது செய்யப்பட்ட 674 சட்டவிரோதக் குடியேற்றவாசிகளில் 116 பேர் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளதாக உள்துறை அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார்.

## பொது இடங்களில் புகை பிடிக்கத்தடை; சட்டமூலம் சமர்ப்பிக்க ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் பொது இடங்களில் புகைப்பிடித்தலைத் தடை செய்வதற்குரிய சட்டமூலத்தை கொண்டு வருவதற்கு ஆலோசித்து வருகிறது.

இது தொடர்பில் புகையிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் தொடர்பாக வரைச் சட்டமூலம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே சிறிலங்காவில் புகைப்பிடித்தல் தொடர்பான விளம்பரங்கள், இலத்திரனியல் ஊடகம் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

உலகில் புகைப்பிடிப்பவர்களின் இறப்பு வீதம் ஒரு வருடத்திற்கு 4.9 மில்லியனாகக் கணக்கிடப்பட்டுள்ளது என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.



### சிந்தனைக்கு

மக்களின் ஆதரவுடன் மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புகளே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM - மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 11-08-2003

## பா.உ.களின் ஆயுதங்கள்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கைத்துப்பாக்கிகளை மீளப்பெற சிறிலங்கா உள்துறை அமைச்சு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு பலர் அடாவடித்தனங்களில் ஈடுபடுவதால் அரசாங்கத்திற்குப் பெரும் அபகீர்த்தி ஏற்படுவதாகவும் இதனையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனடிப்படையில் 225 கைத்துப்பாக்கிகள் மீளப்பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன் 200 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பதிவுகள் எதுவுமற்ற கைத்துப்பாக்கிகள் இருப்பதாக, அதாவது சட்டவிரோதமான முறையில் துப்பாக்கிகள் வைத்திருப்பதாக தகவல்கள் வெளியாகின. அத்துப்பாக்கிகளைப் பதிவு செய்ய நடமாடும் சேவையொன்றை நடத்த பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அப்படியானால், மொத்தமுள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்படப்போகின்ற கைத்துப்பாக்கிகள் சட்டபூர்வமாக வழங்கப்பட்டவையாகவே இருக்க முடியும். சட்டபூர்வமற்ற முறையில் வைத்திருக்கும் துப்பாக்கிகளின் நிலை என்ன?

சிறிலங்காவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் / அமைச்சர்கள்கூட வன்முறையில் ஈடுபடுவது அல்லது சம்பந்தப்படுவது புதியதொன்றல்ல. வழமையாகவே மிரட்டல் வேலைகளில் ஈடுபடும் அவர்கள் தேர்தல் காலத்தில் அதனைத் தீவிரமாகவும் வெளிப்படையாகவும் செய்வது வழமை.

சிறிலங்காவின் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் அவரது இரு புதல்வர்களும் தேர்தல் காலப் படுகொலைகளில் சம்பந்தப்பட்டதாகவும் நேரடியாகவே ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

இன்றுள்ள அமைச்சர் ஒருவரின் புதல்வர், மருமகன் ஆகியோர் இருவேறு சந்தர்ப்பங்களில் பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். அதேவேளை, தேர்தல் முறைகேடுகள் மூலமும் இன்றைய தேர்தல் முறை காரணமாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகியுள்ள தமிழ்க்குழு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்பாதுகாப்பு என்ற ரீதியில் வழங்கப்பட்ட ஆயுதங்கள் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

எனவே, இவர்களின் கைகளில் சட்டபூர்வமாகவும், சட்டபூர்வமற்ற நிலையிலும் ஆயுதங்கள் இருப்பது பல விபரீதமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

ஆனால், அரசாங்கம் அறிவித்திருப்பதுபோல் இரண்டு மெய்ப்பாதுகாவலர்களை வழங்கிவிட்டு அவர்களிடமுள்ள ஆயுதங்களை மீளப்பெறுவதற்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சம்மதிப்பாரா? என்பது கேள்விக்குரியதாகும். நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் தமது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்பில்லை என்றும் கூறிவரும் அவர், இது அரசாங்கத்தின் சதிச் செயல் எனக் கூறி மறுக்கவும் கூடும்.

அதேவேளை, இவற்றைவிடவும் சட்டவிரோத ஆயுதங்கள் சிறிலங்காவில் பெருமளவில் இருப்பது வெளிப்படையானதோர் விடயமாகும். கடந்த சில வருடங்களில் 50 ஆயிரம் பேர் படையிலிருந்து தப்பி ஓடியுள்ளதாக அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் பெரும்பாலானோர் ஆயுதங்களுடனேயே தப்பியோடியுள்ளனர்.

இன்னமும் கடமையில் இருக்கும் இராணுவத்தினர் விடுமுறையில் சொந்த இடங்களுக்குத் திரும்பும்போது ஆயுதங்கள், வெடிபொருட்களைக் கடத்திச் செல்வதும் வெளிப்பட்டிருக்கிறது.

இவை படையினரால் கொள்ளைகளுக்குப் பயன்படுத்தப்படுவதுடன் பாதாள உலகக் குழுவினருக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இதுவரை கூறப்பட்டு வந்தது. ஆனால், இப்பொழுது அவை அரசியல்வாதிகளின் கைகளுக்கும் செல்வதாகத் தெரியவந்திருக்கிறது.

எனவே, சட்டபூர்வமாக வழங்கப்பட்ட கைத்துப்பாக்கிகளைப் பெற்றுக் கொள்வதால் நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிடும் எனக்கூற முடியாது. இவ்வாறு மீளப்பெறப்படும் துப்பாக்கிகளைவிட பல மடங்கு சட்டவிரோதமான முறையில் வெளியில் உள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களிடமுள்ள சட்டபூர்வ/சட்டவிரோதத் துப்பாக்கிகள் அனைத்தும் மீளப்பெறப்பட்டாலும் அவர்கள்பாதாள உலகக் குழுவினரைப் பயன்படுத்தி மிரட்டல் வேலைகள், படுகொலைகளில் ஈடுபடமாட்டார்கள் என உறுதி கூறிவிட முடியாது.

அவர்கள் பாதாள உலகக்குழுவினரை மட்டுமல்ல, சட்டபூர்வமான படைகளைக்கூட இதற்குப் பயன்படுத்தத் தயங்கமாட்டார்கள் என்பதற்கு சிறிலங்காவின் அண்மைய வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு.

# பொலிஸ் சேவையிலுள்ள வெற்றிடங்கள் ஒரு மாதத்தில் நிரப்ப நடவடிக்கை

### புதிதாக ஆட்சேர்ப்பு இல்லை

(கொழும்பு)

பொலிஸ்சேவையிலுள்ள சகல வெற்றிடங்களையும் ஒரு மாதத்திற்குள் நிரப்ப பொலிஸ் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுபற்றி கடந்த மாதம் பொலிஸ்மா அதிபருடன் ஆராயப்பட்டதாக பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபயசூரிய தெரிவித்துள்ளார். பொலிஸ் சேவையில் பல வருடங்களாக வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாகவும், அவற்றை நிரப்புவதற்கான அவசர தேவை இப்போது ஏற்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிய நியமனங்கள் எதுவும் மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையெனவும் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைக் கொண்டே நிரப்பமுடியும் என அவர் மேலும் கூறியுள்ளார். வெற்றிடங்களில் 50 சதவீதமானவை சேவைமூப்பு அடிப்படையிலும் மிகுதி 50சதவீதமானவை சேவை மூப்பு திறமை அடிப்படையிலும் நிரப்பப்படுமெனக் கூறியுள்ளார்.

# படை அதிகாரிகள் கட்டமைப்பில் இராணுவத் தலைமையகம் மாற்றம்

சிறிலங்காவின் இராணுவத் தலைமையகம் நாட்டின் அனைத்துப் பகுதியிலும் உள்ள படையணிகளிலும் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது. இம்மாற்றங்கள் அனைத்தும் கட்டளையதிகாரிகளின் தரத்தைச் சேர்ந்ததாகும்.

இதன்படி கடந்த வெள்ளியன்று அறிவிக்கப்பட்டவாறு ஆகஸ்ட் 15 முதல் செயற்படுமாறு கிழக்குப் பிராந்திய கட்டளையதிகாரியாக மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராட்சியும் 22 ஆவது டிவிசன் கட்டளையதிகாரியாக சுனில் தென்னக்கோனும், இராணுவத் தலைமையக பயிற்சியாளர் பணிப்பாளராக சீவலி வணிக சேகரவும், கொழும்பு நடவடிக்கைத் தலைமையக அதிகாரியாக காமினி ஜெயசுந்தரவும் 21 ஆவது படைப்பிரிவின் அதிகாரியாக காமினி ஹெட்டியாராச்சியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முப்படைத்தலைமையகத்தின் 56ஆவது படைப்பிரிவில் தற்போது பணியாற்றும் பிரிகேடியர் லோறன்சும் 22ஆவது படைப்பிரிவில் பணியாற்றும் பிரிகேடியர் ஜோன் செனவிரத்னவும் 55ஆவது படைப்பிரிவில் பணியாற்றும் பிரிகேடியர் உபாலி எதிரி சிங்கவும் இராணுவத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாமை மோசடிகள் தொடரவே வாய்ப்பளிக்கின்றது

### தேர்தல் ஆணையாளர் கவலை

(கொழும்பு)

வரும்காலத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் 1999ஆம் ஆண்டு வடமேல் மாகாண சபைக்கு நடைபெற்ற தேர்தல் போன்று நடைபெறா வண்ணம் கவனம் செலுத்த வேண்டும் என தேர்தல் ஆணையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

17ஆவது அரசியல் திருத்தத்தின் படிஇதுவரை தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாததால் நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் ஊழல்கள், மோசடிகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் இது தொடர்பாக மக்களின் முறைப்பாடுகளை விசாரிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமானதும் இயல்பானதுமான தேர்தல் ஒன்று நடைபெற வேண்டுமாயின் ஆணைக்குழு முக்கியமானதென 2001ஆம் ஆண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை அவர் நினைவுபடுத்தியுள்ளார். எனினும் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனக் கூறும் அவர்,

தற்போதைய சட்டதிட்டங்களுக்கேற்ப இத்தேர்தலை நடத்தி முடிக்க முடியுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

# இ.போ.ச.வையும் ரயில்வேயையும் பாதுகாக்கும்வரை போராடுவோம்

### எதிர்க்கட்சித்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் அமைக்கப்படும் பொ.ஐ.மு. அரசாங்கத்தில் சிறிலங்கா போக்குவரத்துச் சபையை மீண்டும் ஏற்படுத்தும் வரையிலும் ரயில்சேவையைத் தேசிய போக்குவரத்துச் சேவையாக்குவது வரையும் எமது போராட்டம் தொடரும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிளவர் வீதியில் நடைபெற்ற இ.போ.ச. தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பிலிப் குணவர்த்தனவும் பண்டாரநாயக்கவும் நாட்டிற்காக ஏற்படுத்திய போக்குவரத்துச் சேவை தனியார் மயமாக்கலை தடுக்க இப்போது அனைத்து சக்திகளையும் திரட்டி எதிர்க்கவேண்டும்.


நாட்டில் இன்று பள்ளிச்சிறார்களும் பொதுமக்களும் போக்குவரத்தில் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இப்போது அரசு போக்குவரத்துச் சேவையை தனியாருக்கு விற்க முயற்சிக்கின்றது. இதனைப் பாதுகாக்க வேண்டும். தமது பிள்ளைகளைப் பட்டினி போட்டு அரசுக்கு சேவை செய்யும் அரச ஊழியர்களின் வேதனம் அதிகரிக்கப்படவேண்டும் என்று கூறியுள்ளார்.

கொத்தணி பஸ் நிறுவனங்களின் உயரதிகாரிகளுக்கும் அரசுக்கு விசுவாசமானவர்களுக்குமே இவ்வரசாங்கம் 10 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை சம்பளம் வழங்குகிறது எனக் குற்றம் சுமத்தினார்.

# மூன்று முறை பட்டத்தை வென்ற 'டெவன்போர்ட்' இறுதியாட்டத்திற்குத் தகுதி

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் லொஸ் ஏஞ்சல் பகிரங்க டெனிஸ் போட்டியின் மகளிர்ஒற்றையர் பிரிவில் முன்னணி வீராங்கனை லிம்சே டெவன்போர்ட் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

கலிபோர்னியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளில் அரையிறுதிஆட்டம் நேற்று நடைபெற்றது. இதில் ஜப்பானின் கஜியா மாவும் அமெரிக்காவின் டெவன் போர்ட்டும் மோதினர். 53நிமிடம் நடைபெற்ற ஆட்டத்தில் டெவன் போர்ட்வெற்றியீட்டினார். ஏற்கனவே மூன்று முறை லொஸ்ஏஞ்சல் பகிரங்க டென்னிஸ் போட்டியை டெவன் போர்ட் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு அரையிறுதிப் போட்டியில் பெல்ஜியத்தின் ஹிம் கிலிஸ்டசும் இத்தாலியின் பிரஸ்கிஸ் கா செல்சியா வோவும் விளையாடுகின்றனர்.




# நடுவர்களின் தீர்ப்பால் பிறேசில் அணி ஆட்சேபம்

பனாமாவில் நடைபெற்றுவரும் கூடைப்பந்தாட்ட போட்டியின் முடிவு தொடர்பாக பிறேசில் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிற்கும் பிறேசிலுக்கும் இடையே நடைபெற்ற இப்போட்டியில் பெண்கள் பிரிவு கூடைப்பந்தாட்ட அரையிறுதிப்போட்டியில் அமெரிக்கா வெற்றியீட்டியது குறித்து பிறேசில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. போட்டிகளின் புள்ளிகளைக் குறிப்பிடும் அதிகாரிகளின் கவனயீனத்தால் இவ் வெற்றி அவர்களுக்குக் கிடைத்துள்ளதாக பிறேசில் குற்றம் சாட்டியுள்ளது. புள்ளிவிபரங்களின் போது 03 புள்ளிகளைத் தவறுதலாக அதிகாரிகள் அமெரிக்க அணிக்கு வழங்கியுள்ளனர் என பிறேசில் ஒலிம்பிக் குழு இது தொடர்பாக செய்துள்ள மேன்முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக வெண்கலப் பதக்கத்திற்கான கனடாவிற்கும், பிறேசிலுக்குமிடையிலான போட்டி 40 நிமிடங்கள் தாமதமாகியே ஆரம்பமாகியது.

## தலைவரின்...

முன்வந்திருக்கிறார்கள் என்பது எமது போராட்டத்திற்கு மிகப் பெரிய உந்துசக்தியையும் பெரிய பலத்தையும் தேடித்தந்திருக்கின்றது.

### எமது விடுதலைப்போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது

நாம் இன்று முக்கியமான திருப்பு முனைக் காலகட்டத்திலே- வரலாற்றுக்காலகட்டத்திலே இருக்கிறோம். ஏனெனில் நாம் பல ஆண்டுகளாக - இலங்கை சுதந்திரமடைந்தது என்று சொல்லப்படுகின்ற காலத்திலிருந்து தமிழ் மக்களாகிய நாம் எமது உரிமைகளுக்காக தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம். ஆனால் இன்றுதான் எமது விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் சர்வதேச அனுசரணை கிடைத்துள்ளது.

எங்களுடைய மூத்த தலைவர்கள் பல வழிகளில் எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குப் போராடினார்கள். சனநாயக வழியிலும் அகிம்சை வழியிலும் பாராளுமன்றங்களில் இருந்தும் பலபோராட்டங்களை நடத்தினார்கள்.

ஆனால் .அவை எவையுமே எதிரியின் செவிகளில் விழவில்லை. அவர்கள் எங்களுக்குத் தந்தவை வன்முறையும் இனவழிப்பும் சொத்தழிப்பும் இடப்பெயர்வுகளையுமே தான்.

ஆனால் இந்த வரலாற்றுக் காலகட்டதிலேயேதான் அதாவது, தமிழர்கள் மென்முறைப் போராட்ட வழியூடாகத் தங்களது உரிமைகளை வென்றெடுக்கின்ற சாத்தியப்பாடு ஒருபோதும் இல்லை என்கின்ற உண்மையையும், யதார்த்தத்தையும் புரிந்துகொண்டு வரலாறு எங்களுக்கொரு தலைவனைத் தந்தது.

அவ்வாறு கிடைத்த தலைவனது காலத்தில் எங்களது இனம் மீண்டும் அடங்கிப்போனவீரம், எழுச்சி எல்லாம் உருப்பெற்று மீண்டும் எங்களது இனம் எழுச்சி பெற்று போராட முற்பட்டது.

அந்த வரலாற்றுப் பொறுப்பை எமது தலைவர் கையிலே எடுத்தார். எமது இனம் புதிய பாதையில் உலகப் பந்திலே தமிழீழத் தேசத்திலே மீண்டும் நிலைபெற்று வாழக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்ற யதார்த்தமான ஒரு சக்தியை எமது தலைவர் உருவாக்கினார்.

இன்று நாம் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். உலக அரங்கிலே சமத்துவத்தோடும் தமிழர்களின் பிரதிநிதிகளாக உங்களுடைய தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை இன்று தலை நிமிர்ந்து உரிமைக்காகக் குரல் கொடுக்கிறது.

### தலைவர் உறுதியாக வழிநடத்தியமையால் நாம் இன்று நிமிர்ந்து நிற்கின்றோம்

எங்களது மக்களின் உறுதியும் குறிப்பாக எங்களது தலைவர் எத்தனையோ நெருக்கடிகள், எத்தனையோ ஆபத்துக்கள் சூழ்ந்த வேளையிலும் அடி பணியாது உறுதியோடு நின்று தமிழினத்தின் உரிமைக்காகவும், தமிழினத்தின் விடுதலைக்காகவும் இந்த விடுதலைப் போராட்டத்தை நகர்த்திச் சென்ற காரணத்தால் நாங்கள் இன்று நிமிர்ந்து நிற்கின்றோம். உண்மையிலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழுகின்ற உங்களைச் சந்திக்கின்ற பொழுது இலட்சக்கணக்கான மக்களைச் சந்திக்கின்ற உணர்வு ஏற்படுகின்றது. ஏனெனில் எல்லாப் பிரதேசங்களிலும் இருந்து எல்லாக் கிராமங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாக அனைத்து மூலைமுடுக்குகளிலிருந்தும் கலந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களிடம் எங்களது கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்கின்ற உணர்வு எங்களிடம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் ஒரு உண்மையான அரசியல் விழிப்புணர்வோடு அனைத்து மக்களும் ஒன்றுதிரண்டு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் அணிதிரண்டு போராட வேண்டிய உறுதியான காலகட்டம் இன்றைய காலகட்டம் இன்றைய காலகட்டம். ஏனெனில் போர் அரக்கனை நாம் எல்லோரும் ஒன்றுதிரண்டு போராடி அவர்களது கனவு உடைத்தெறிந்து, எமது விடுதலைப் போராட்டத்தில் புதிய சகாப்தத்தை படைத்திருக்கின்றோம். இன்று புதிய சூழல் பிறந்திருக்கிறது. கடந்த காலத்தில் சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலத்திலே யுத்தநிறுத்தம் ஏற்பட்டு பேச்சுவார்த்தை முயற்சி நடைபெற்றது.

அந்தப் பேச்சுக்களில் சந்திரிகா தம்மைப் பலப்படுத்திக் கொண்டு தமிழ் மக்கள் மீது ஒரு பாரிய யுத்தத்தைத் தொடுப்பதற்கான சிந்தனையோடு அந்தப் பேச்சுவார்த்தையை முன்னகர்த்திய காரணத்தால் அது குழம்பியது.

மீண்டும் யுத்தம் எம்மீது ஏவிவிடப்பட்டிருந்தது. அதற்கு சமாதானத்திற்கான யுத்தம் என பெயரிடப்பட்டது.

### "சமாதானத்துக்கான யுத்தம்" தமிழர்களுக்கு அழிவை ஏற்படுத்தியது.

இந்தச் சமாதானத்திற்கான யுத்தம் தான் தமிழர்களுடைய வரலாற்றில் பெரும் அழிவுகளை ஏற்படுத்திய கொடூரமான காலமாக இருந்தது. இலங்கைத்தீவில் சமாதானத்தை ஏற்படுத்துவதனால் விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து தமிழ் மக்களை தனிமைப்படுத்த வேண்டும் என்ற கருத்தை உலக அரங்கில் பரப்பியது. அதை ஒரு கட்டத்தில் உலகமும் நம்பியது.

நாங்கள் குடாநாட்டில் இருந்து பின்வாங்க வேண்டிய இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டோம். எமது தலைவர் போராளிகள் அனைவரும் இந்த முடிவையிட்டு மிகுந்த கவலை அடைந்தோம். எனினும் எமது இனத்தின் எதிர்காலம் தமிழர்களது தலைவிதியை, அரசியல் உரிமைகளை வென்றெடுக்கின்ற ஒரு தூர நோக்குப் பார்வையுடன் எமது பலத்தைக் கட்டி எழுப்பி எமது இனத்திற்கு விடுதலையைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்ற தூர நோக்குடனேயே எமது தலைவர் இந்த முடிவை எடுத்தார். மிகவும் திறமையாக முறியடித்தார். அதனூடாக இனி ஒருபோதும் தமிழர்களின் பலத்தை சிதைத்துவிட முடியாது என்ற யதார்த்தத்தை எங்களது தலைவர் நிரூபித்தார்.

அதனைத் தொடர்ந்து ஓயாத அலைகள்-02, 03 நடவடிக்கை மூலம் பல ஆயிரக்கணக்கான படைகளைக் கொன்று எமது பல பகுதிகளை வெற்றி கொண்டோம். அப்போது உலகம் திகைத்துநின்றது. விடுதலைப்புலிகளின் உறுதிப்பாடும் தமிழ்மக்களின் ஆதரவோடு விடுதலைப்புலிகள் முன்னெடுக்கின்ற இந்தப் போராட்டம் ஒருபோதும் நசுக்கப்பட முடியாதது இது மேலும் மேலும் வீறுநடை போட்டுக்கொண்டு எழுச்சி பெற்றுக்கொள்ளும் என்ற உண்மையை சர்வதேச சமூகத்திற்கு புரிய வைத்தது.

ஆனையிறவுத் தளத்தை தலைவர் வெற்றி கொண்டார். அந்த வெற்றியுடன் உலகம் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக வெற்றி கொள்வதற்கு சிறிலங்கா அரசுக்கு துணைபோவது எந்தவகையிலும் பயன்தராது என்கின்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டது.

தமிழர்கள் பலம்பெற்றார்கள். தம்மைத் தற்காத்துக் கொள்ளத் துணிந்தார்கள். தமிழர்கள் எதிர்த்து நின்றார்கள். இவற்றின் எதிர்விளைவு சிங்களத்தேசத்தின் வாசல்வரை தொட்டு நின்ற காரணத்தால் யுத்தம் என்றால் என்ன என்கிற அனுபவரீதியான உணர்வை சிங்கள தேசமும் உணரத் தலைப்பட்டது.இந்த நடவடிக்கையால் இனவாதிகளின் கருத்துக்கள் உடைத்தெறியப்பட்டு ஒரு சமாதானம் தேவை என்ற யதார்த்த சூழ்நிலை ஏற்பட்டது.

### தமிழர்கள் எழுச்சியடைந்ததால் பேசுவதற்கு சிங்களதேசம் முற்பட்டது

தமிழர்கள் தம்மைத் தற்காத்துக் கொள்கின்ற ஓர் எழுச்சியடைந்த காரணத்தால்தான் தமிழர்களுடன் ஒரு நாகரீகமான முறையில் பேச முற்பட்டார்கள்- ஒரு யுத்த நிறுத்தத்தைச் செய்து பேசுவதுதான் வழி என்ற யதார்த் தத்தை நாங்கள் ஏற்படுத்திக் கொண்டோம்.

வரலாறு எமக்கு ஒரு புதிய சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறது. எங்களின் தலைவருடைய காலத்தில் அனைத்து மக்களும் ஒன்றுபட்டு அணிதிரண்டு போராடி எமது உரிமைகளை வென்றெடுக்கின்ற சுதந்திர மண்ணிலே நாங்கள் எங்களது தலைமுறைகள் மகிழ்வோடும் நிறைவோடும் வாழ்கின்ற சூழலை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

தமிழர்களுடைய இறைமையை மீட்டு தமிழர்களுக்கு நிறைவைப் பெற்றுக்கொடுத்து தமிழர்களுக்கு கௌரவத்தைப் பெற்றுக்கொடுக்கின்ற தலைவரது காலத்திலே நாங்கள் போராடுகிறோம். என்பதில் ஒவ்வொரு போராளிகளும் பொறுப்பாளர்களும் நிறைவடைகின்றோம். இனி ஒருபோதும் தமிழர்களுக்கு தலைகுனிவான நிலை ஏற்படாது.

இன்று சர்வதேச அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் நடைபெற்று நம்பிக்கையுடன் முன்னெடுக்கப்பட்டாலும் அங்கே சிங்கள தேசத்தின் பேரினவாத சக்திகள் மீண்டும் இதை சீர்குலைக்க முனைந்துநிற்கின்றன. ஆனால் நாங்கள் உறுதியோடு இருக்கிறோம். நாம் கடந்த காலங்களைப் போல் ஏமாற்றப்படக் கூடிய சக்தி அல்ல. பலமான போராட்ட சக்தியாகத் தமிழர்களது படை இருக்கிறது. தமிழர்களது தலைமை அந்த உறுதியோடும் நிமிர்வோடும் இருக்கின்றது. அதனால் நாங்கள் சமாதானக் கரத்தை நீட்டியபடி இருக்கின்றோம். சமாதானக் கதவைத் திறந்தபடி இருக்கிறோம். நாம் இதனை மூடப்போவதில்லை. சந்தர்ப்பத்தைத் தொடர்ந்து வழங்குவோம். ஆனால் சிங்கள தேசம் இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு சமாதானப் பாதையூடா முழு ஈடுபாட்டோடு இந்த சமாதானத்துக்குள் உள்நுழைந்து செயற்படுமாக இருந்தால் நிச்சயமாக இலங்கைத்தீவில் ஒரு சமாதானத்தை ஏற்படுத்தலாம். மீண்டும் எம்மை ஏமாற்ற முற்பட்டால் அதனுடைய விளைவுகளை சிங்கள தேசம் நிச்சயமாக உணர்ந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை சிறிலங்கா அரசாங்கம் உதாசீனப்படுத்த முடியாது. அப்படி உதாசீனப்படுத்தினால் தமிழ மக்களைத் தங்களுடைய வழியில் பிரித்து தங்களுடைய தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கின்ற சூழ்நிலைக்கு உடனடியாக வழிவிடவேண்டும். இதுதான் யதார்த்தம்.

சர்வதேச சமூகம் இந்த உண்மை நிலையை ஏற்றுக் கொள்ளும் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கையோடு இருக்கின்றோம்.

### எமது நியாயமான போராட்டத்தை சர்வதேசம் உணரவேண்டும்

இவ்வளவு காலமும் தமிழீழ விடுதலைப் புலிகள் வன்முறைவாதிகள், பயங்கரவாதிகள்,அமைதிவழியில் தீர்வு காண ஒத்துவராதவர்கள் என்ற பிரச்சாரத்தை சிறிலங்கா அரசாங்கம் செய்து வந்தது. இன்று அந்தச் சூழ்நிலையை மாற்றியமைக்கின்றதொரு முனைப்பாக அரசியல் இராஜதந்திர அரங்கிலே எமது தலைவர் காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார். சர்வதேச சமூகம் எமது மக்களுடைய உண்மையான போராட்டத்தை, நீதியான நியாயமான தர்மப போராட்டத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். நாங்கள் கேட்பது இன்னொரு இனத்தை ஆக்கிரமிப்பதற்கான கோரிக்கையல்ல. காலம்காலமாக தமிழர்கள் வாழ்ந்த தாயகத்தில் கௌரவத்தோடும் மகிழ்வோடும் எங்களை நாங்களே ஆளக் கூடிய தன்னாட்சியுரிமையைத்தான் நாங்கள் கோரியிருக்கின்றோம். இந்த உண்மையை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

### உறுதிப்பாடு கொண்ட தலைமையின் கீழ் மக்கள் அணி திரண்டுள்ளனர்

நாங்கள் எமது மக்களுடைய அபிலாசைகள், எதிர் காலம்,அரசியல் உரிமைகளை நிலைநாட்டுகின்ற அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவதற்காகப் போராடும் ஒருபோராட்ட அமைப்பு. எங்களுடைய மக்களின் எதிர்கால நலன் கொண்டே எமது தீர்மானங்கள் அமையுமே தவிர எந்த அழுத்தங்களுக்கும் அடிபணிந்து போகமாட் டோம். எமக்குக் கிடைத்த தலைவர் அதை நிரூபித்திருக்கின்றார். இந்த அர்ப்பணிப்பு மிக்க இலட்சிய உறுதிப்பாடு கொண்ட தலைமைத்துவத்தின் கீழ் இன்று எமது மக்கள் அணிதிரண்டு நிற்கிறார்கள். இந்தக் காலத்திலேயே நாங்கள் எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். இவ்வாறு ஒரு தலைமையின் மக்களணி திரண்டு நிற்கின்ற காலகட்டத்திலும் பலம்பொருந்திய முன்னகர்வை சிலர் மலினப்படுத்த முனைந்துள்ளதை அறிந்து நாம் வேதனைப்படுகின்றோம். ஆயிரக்கணக்கான உயிர்களை அர்ப்பணிப்புச் செய்து இந்த அரசியல் அரங்கில் முன்னிலை பெற்றுள்ள தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தைத் தயவு செய்து கொச்சைப்படுத்தாதீர்கள். நாங்கள் விதைத்து விளைச்சலை அறுவடை செய்து பொதுமக்களிடம் கொண்டுபோய் சேர்க்கின்ற அந்த வரலாற்றுக்கடமை எங்களுடைய தலைமையிலும், விடுதலை அமைப்பின் கையிலும் இருக்கின்றது. அந்த வரலாற்றுப் பொறுப்பைத் தயவு செய்து உதாசீனப்படுத்தாதீர்கள். பலவீனப்படுத்த முயற்சிக்காதீர்கள். பலவீனப்படுத்தும் முயற்சி நிச்சயமாகப் பலிக்காது. (லோ)

## மூவாயிரத்து...

மேற்படி நேற்றைய நிகழ்வில் வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பருதி, தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோரும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டதுடன் தீவகக் கோட்டத்தின் வடமராட்சிக் கோட்டத்தின் தென்மராட்சிக் கோட்டத்தின், யாழ்.நல்லூர்க் கோட்டத்தின் மற்றும் கல்விச் சமூகத்தினரின் சிறிலங்கா இராணுவ நெருக்குவாரங்களின் துயரங்கள் பற்றிய தீர்மானங்களையும் அங்கு முன்வைத்தனர்.

இப்பேராளர்கள் சிறிலங்கா அரசு மீண்டும் ஏமாற்ற முற்படுமாயின் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழத் தயார் என எழுந்து நின்று உறுதியுரை எடுத்துக் கொண்டனர்.

## அமைச்சர்....

தோர் சங்கமும் இணைந்தே மேற்படி மறியல் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.நேற்று யாழ்.குடா நாட்டிற்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் அவரது குழுவினரும் நேற்று அரச செயலகத்திற்கு விஜயம் செய்து அரச அதிபர், யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் விசேட சந்திப் பொன்றை மேற்கொள்ள வருகைதர இருந்த நிலையிலேயே மேற்படி அமைப்புக்கள் செயலக வாயிலை வழிமறித்து மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.இதனை அறிந்துகொண்ட அமைச்சர் ஜோன் அமரதுங்க அவ் விஜயத்தை ரத்துச் செய்துள்ளார். (33)

## இழுத்தடிப்பு...

அழைக்கப்பட்டிருந்தார். அதற்குத் தான் கலந்துகொள்ளமுடியாது இருப்பதாக கடிதமூலம் சிப்பாய் அறிவித்திருந்தார். அதனை அடுத்து கடந்த ஆறாம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.மேற்படி தவணைக்கும் சமுகமளிக்காத சிப்பாய் இதற்கும் பல போலிச் சாட்டுகளைக் கூறியுள்ளார். (33)

## வயோதிபரை....

இதுகுறித்து மேலும் தெரிய வருகையில், முறிகண்டி ஆலயத்தில் வயோதிபர் ஒருவர் வழிபாடு முடித்துவிட்டு நிற்கையில் அவ்விடத்தில் தரித்து நின்று விட்டு புறப்பட்ட 'ஹைஏஸ்' வாகனம் மோதிவிட்டு நில்லாது சென்றுள்ளது.முகத்தில் காயங்களுக்குள்ளான மேற்படி வயோதிபர் வாகனம் ஒன்றின் மூலம் கிளிநொச்சி காவல்பணிமனைக்கு வந்து முறையிட்டதைத் தொடர்ந்து தமிழீழ காவல்துறை வீதிப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி விரைந்து சென்று உடமையாள்புரத்தில் வைத்து சம்பந்தப்பட்ட வாகனத்தினைத் தடுத்து நிறுத்தி வாகனத்தினையும் சாரதியினையும் காவல்பணிமனைக்குக் கொண்டு வந்தார். இது தொடர்பாக காவல் துறையில் வைத்து விசாரணைகள் இடம்பெற்றது. காயமடைந்த வயோதிபர் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## மேஜர்...

அன்ரனியின் முன்னாள் சிறப்புத் தளபதியும், வடபோர் முனைத்தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் வீரமணி நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். பொதுமாவீரர்களுக்கான மலர் வணக்கத்தை வடபோர் முனைக் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான லெப்.முகுந்தன், படையணித் தாக்குதல் தளபதி பல்லவன் ஆகியோர் செலுத்தினார்கள். மேஜர் கிண்ணியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை மேஜர் கிண்ணியின் தாயார் கிண்ணி அம்மா ஏற்றி வைத்தார். புலிகளின்குரல் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் எழுத்தாளருமான நா.யோகேந்திரநாதன் அவர்களின் எழுத்தாக்கத்தால் சாள்ஸ் அன்ரனிப் போராளிகளால் களத்தில் சிந்துநடைக்கூத்து நடைபெற்றது. அடுத்ததாக சிறப்புரையினை படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து புலம்பெயர்ந்த தமிழர்களின் சார்பாக லண்டன், தென்னாபிரிக்கா, நோர்வே, கனடா போன்ற நாடுகளில் இருந்து இந்நிகழ்விற்கு வந்திருந்த புலம்பெயர் தாயக மக்களுக்கு எமது போராட்டத்தின் நியாயப்பாட்டினையும் சாள்ஸ் அன்ரனியின் சிறப்புப் படையணியின் வீரவரலாற்றையும் மாவீரர்களின் தியாகங்களையும் பற்றிய விசேட உரையினை தமிழிலும் ஆங்கிலத்திலும லண்டன் மாநகரில் இருந்து வந்திருந்த மதிப்பிற்குரிய பாலசுப்பிரமணியம் அவர்களும் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சின்னப்பன் அவர்களும் நிகழ்த்தினர்.

## இடைக்கால...

அரசு முனைந்து வருவதாக ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது. மேலும் தென்பகுதிக் கிராமங்களில் வீடுவீடாகச் சென்று ஜே.வி.பியினர் தமது எதிர்ப்புப் பிரச்சாரங்களை மேற்கொள்ள வுள்ளனர்.




... பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.